விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | தை 8 | ஐ. அவ் 10 | இதழ் 345
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 21-1-1986

யாழ். நகர் சம்பவம்: அரசு அறிக்கை

## கோட்டைப் பக்கமாக வெளிநாட்டவர்கள் வந்தனர்

(கொழும்பு)

யாழ். கோட்டைப்பக்கமாக நேற்றுக்காலை சென்றிருந்த இரு வெளிநாட்டவர்களும் சட்டவிரோதமாக தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்றும், இவ்விருவரும் தீவிரவாதிகளின் கூலிப் படையினராக இருக்கலாம் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

''நேற்றுக்காலை 7-30 மணிக்கு ஆயுதம்தாங்கிய தீவிரவாதக்குழுவொன்றுடன் இரு வெளிநாட்டவர்கள் யாழ். கோட்டைப்பக்கம் வந்தனர். அப்பொழுது 'சென்றி'க்கு நின்ற இராணுவச்சிப்பாய் ஒருவர் வரவேண்டாம் என்று எச்சரிக்கைசெய்தார். அதேசமயம் அங்கு நின்ற தீவிரவாதிகள் துப்பாக்கிகளால் சுட்டனர். அங்கு வெளிநாட்டவர் நின்றதால் 'சென்றி'யில் நின்ற இராணுவச்சிப்பாய் ஆகாயத்தை நோக்கிச்சுட்டார், பின்னர் அவர்கள் அனைவரும் தப்பி ஓடிவிட்டனர். வெளிநாட்டவர் யாழ்ப்பாணம் செல்வதற்குக் கடந்த சில நாட்களாக அனுமதி வழங்கப்படவில்லை'' என்று அரசு அறிக்கையில்

(7-ம் பக்கம் பார்க்க)

பாதுகாப்பு வலயத்தைவாபஸ்பெறக்கோரி

# யாழ். முஸ்லிம்கள் இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

(ஏ. வி. மாணிக்கம்)

**ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தை எதிர்த்தும், யாழ். கோட்டையில் இருந்து இராணுவத்தை வாபஸ்பெறக் கோரியும், இராணுவத்தினரின் குண்டுத் தாக்குதலால் பலியான ஒன்பது முஸ்லிம்களுக்கும் அனுதாபம் தெரிவித்தும் இன்று காலை யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்துகின்றனர்.**

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி சந்தியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி, யாழ் நகரத்தின் ஊடாக யாழ். செயலகத்தைச் சென்றடையும்.

அங்கு வைத்து அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று ஊர்வலத்தினரால் கையளிக்கப்படும்.

ஊர்வலத்தில் சகல பள்ளிவாசல் பரிபாலகர்களும், முஸ்லிம் அமைப்புகளும், முஸ்லிம் மக்களும் கலந்துகொள்ளும்படியும் ஆதரவாக யாழ்ப்பாணம் முஸ்லிம் வர்த்தகர்களும் தமிழ் வர்த்தகர்களும் சகல கடைகளையும் மூடிவிடும்படியும் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

### இஸ்லாமிய இளைஞர் அமைப்பு

அரசாங்கம் தமிழ் தீவிரவாதிகளுக்கு எதிராக வடமாகாணத்தில்பொதுமக்களைப் பாதிக்கும் வகையில் டாது

[7-ம் பக்கம் பார்க்க]

### விமானக் கடத்தல்

### மூவருக்கு மரணதண்டனை

[லாகூர்]

'இந்திய ஏயர் லைன்ஸ்' விமானங்களைக் கடத்திய குற்றத்திற்காக லாகூர் நீதிமன்றம் மூன்று பேருக்கு மரணதண்டனை வழங்கியுள்ளது. ஏழு பேருக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

[8-ம் பக்கம் பார்க்க]

## யாழ். சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். சட்டத்தரணிகள் சங்கம், ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறுமாறு கோரி, ஜனாதிபதிக்கு அவசரத் தந்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

இதுசம்பந்தமாக யாழ். மாவட்ட நீதிமன்ற மண்டபத்தில் சட்டத்தரணிகள் சங்கத்தினர் நேற்றுக்காலை கூடி ஆலோசனை நடத்தினர். சங்கத் தலைவர் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில், நீதிமன்ற விசாரணைகள் நடைபெறுவதற்கு முன்னர் இக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்

[8-ம் பக்கம் பார்க்க]

## நாளை கடையடைப்பு

[யாழ்ப்பாணம்]

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயப்பிரகடனத்தையும், இராணுவத்திற்கு [கனரக ஆயுதங்கள் பாவிக்க வழங்கியுள்ள அனுமதியையும் வாபஸ் பெறக்கோரி நாளை புதன்கிழமை யாழ். குடாநாடு எங்கும் பூரண கடையடைப்பு நடைபெறும்.

யாழ். குடாநாட்டிலுள்ள சகல வர்த்தக நிலையங்களையும் பூட்டி பூரண எதிர்ப்பைக் காட்டுமாறு யாழ்ப்பாணவர்த்தக சங்க சார்பில், சங்கச் செயலாளர் திரு. எஸ். நமசிவாயம் வேண்டுகோள்

[8ம் பக்கம் பார்க்க)

தமிழ்ப் பிரதேச

# பிரஜைகள்குழு இணைப்புக்குழுகண்டனம்

[யாழ்ப்பாணம்]

''பாடசாலைகள், வைத்தியசாலைகள், வணக்கத் தலங்கள் வர்த்தக நிலையங்கள் மற்றும் பிற வெகுஜன இயக்கங்கள் புதிய பாதுகாப்பு வலயப் பிரகடனம் பற்றிய தமது எதிர்ப்பினை எடுத்துக்கூறுமாறு வேண்டுகிறோம்''

தமிழ்ப் பிரதேசங்களின் பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவின் விசேட கூட்டம் யாழ். நகரில் நடந்தபோது மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் வெளியான அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''புதிய பிரிகேடியரை செவ்வாய்க்கிழமை சந்திக்கும் பொழுது, இப்பிரகடனத்தால் பாதிக்கப்படும் பிரதேசங்களின் பிரஜைகள் குழுக்களையும் அழைத்துச்சென்று இப்

[8-ம் பக்கம் பார்க்க]

## பலத்த கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்-முஸ்லிம் மக்களின் உயிருக்கும்-உடைமைகளுக்கும் பாதுகாப்புக்கருதி யாழ். குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்களுக்குரிய 1000 மீற்றர் சுற்றுவட்ட பாதுகாப்பு வலயத்தை உடனடியாக ரத்துச் செய்யவேண்டுமென்றும், யாழ். கோட்டையிலிருந்து இராணுவமுகாமை அப்புறப்படுத்தவேண்டுமென்றும் யாழ். வாழ் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடித் தீர்மானித்துள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## பிரிகேடியர்-மக்கள்குழு இன்று சந்திப்பு

### பாதுகாப்பு வலயத்தை வாபஸ்பெறுமாறு கோரப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொதுமக்கள் குழுவினர் இன்று காலை வடபகுதி இணைப்பு அதிகாரி பிரிகேடியர் எச். எஸ். ரூபசிங்காவைச் சந்தித்துப் பேசுவார்கள்

இச்சந்திப்பு கோட்டை-இராணுவ முகாமில் நடைபெறும்.

1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறுமாறும், கோட்டைமுகாமிலுள்ள இராணுவத்தினரை மக்கள் நன்மை கருதி வேறு இடத்திற்கு மாற்றுமாறும், பொது மக்கள் குழு, இச்சந்திப்பின்

(7-ம் பக்கம் பார்க்க)

### 10 இளம் பெண்கள் மானபங்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இருதயபுரத்தில் ஆயுதப்படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது 10 இளம்பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டதாகப் பிரஜைகள் குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளது [மா]

## தபால் விநியோகம் தொடர்ந்து பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் நேற்றுக்காலை ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து யாழ். தபால் கந்தோர் நேற்று செயல்பட

(7-ம் பக்கம் பார்க்க)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் குரோதன வருடம் தைத் திங்கள் 9ம் திகதி (22-01-1986) புதன்கிழமை பிற்பகல் 2-10 மணி முதல் 2-48 மணி வரையுமுள்ள இடபலக்கின சுபமுகூர்த்தத்தில்,

எங்கள் புத்திரன்
திருநிறை செல்வன்
**இரவீந்திரன்**
(மாவட்ட பொறியியலாளர் அலுவலகம், கட்டடத் திணைக்களம் வவுனியா)
அவர்களுக்கும்

எங்கள் புத்திரி
திருநிறை செல்வி
**சாந்தினி**
அவர்களுக்கும்

ஆனைக்கோட்டை பிடாரி அம்மன் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராகச் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு உபசாரம் மணமகனில்லத்தில் 25-01-86 சனிக்கிழமை மாலை 4-00 மணி முதல் 7-00 மணி வரை நடைபெறும்.

இங்ஙனம், தங்களன்புள்ள

வ. நல்லையாவும் பாரியாரும்,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

த. பொன்னம்பலமும் பாரியாரும்,
பழம் வீதி,
ஆனைக்கோட்டை.

[C 294]

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

ஈச்சமோட்டை வீதியில் 3 பரப்பு காணியும், சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விளம்பர இல:- C 283, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 283]

நல்ல நிலையில் EL 5000 Series மொரிஸ் மைனர் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: N. F. சந்திரன், தாமரைக்குளம், துன்னாலை, கரவெட்டி. A 104

வவுனியா நகரசபைக்குட்பட்டதும் பத்தினியார் மகிழங்குளத்தில் 4 ஏக்கர் மேட்டு நிலக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பொ. தேவராஜா, தாண்டிக்குளம், வவுனியா. [C-301]

## தேவை

பாவித்த சோதனைப் பேப்பர்கள், பழைய கொப்பிகள் தேவை. தொடர்பு கொள்ளவும்: அண்ணா இண்டஸ்ரீஸ், இணுவில். [A 112]

யாழ். காதி அபூபக்கர் வீதியில் அமைந்து இருக்கும் எனது குளோப்பல் வெல்டிங் சென்டரில் வேலை செய்வதற்கு நல்ல அனுபவமுள்ள ஒருவரும் கைவேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள ஒருவரும் உடன் தேவை. யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவராக இருக்கவேண்டும். தொடர்பு: குளோப்பல் வெல்டிங் சென்டர், No-5, காதி அபூபக்கர் றோட், சோனக தெரு, யாழ்ப்பாணம். [C 302]

கொம்பசிட்டர், மெஷின்மன் தேவை. நேரில் வருக. ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C-303]



## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பழை என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் ஏரம்பமூர்த்தி என்பவரின் மரண சாதனமற்ற மரணச்சொத்துக்களின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி/256

ஏரம்பமூர்த்தி கைம்பெண் சௌபாக்கியகௌரி அம்மாள் பன்னாலை தெல்லிப்பழை

மனுதார்

எதிராக

ஏரம்பமூர்த்தி இரஞ்சன்
ஏரம்பமூர்த்தி வசந்தன்
ஏரம்பமூர்த்தி அசோகன்
ஏரம்பமூர்த்தி மகள் வாசுகி. எல்லோரும் பன்னாலை தெல்லிப்பழை

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986-ம் ஆண்டு தை மாதம் 22-ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் திகதி

1986 ஜனவரி மாதம் 29-ம் திகதி

நீதிமன்ற ஆணைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்.
(ஒப்பம்)
பதிவாளர்.

வரைவு:
ம. சிதம்பரநாதன்
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி.

C 247


## ரூபவாஹினி

ஜனவரி 21 செவ்வாய்க்கிழமை

மாலை:
5-00 செய்திகள்
5-05 விஞ்ஞானம் (தமிழ்)
5-30 'பிளக் பியூட்டி'
6-00 ஆங்கில நிகழ்ச்சி
6-15 'ரத்தின் தொட்டின்' [தமிழ்]
6-30 செய்திகள் (தமிழ)
6-55 'ரைத்மா ரட்ட'
7-25 'தட்ஸ் இன்கிறிடிபிள்'
8-00 செய்திகள் [சிங்களம்]
8-20 'தட்ஸ் இன்கிறிடிபிள்' [தொடர்ச்சி]
8-45 இசை அறிமுக நிகழ்ச்சி
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9:20 'சவன் மிஹிர' [இசை]
9-55 இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான கிரிக்கட் போட்டி [2 ம் நாள்]
9-50 'த சலிவன்ஸ்'



கிராமஅபிவிருத்தித் திணைக்களத்தினால் புலோலியில் ஆரம்பிக்கப்பட்ட தையல்தொழிற்பயிற்சிநிலையத் திறப்பு விழாவை பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை நீதவான் திரு கே. கணபதிப்பிள்ளை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதையும் அருகில் தையல் பயிற்சிநிலையத்தை திறந்துவைத்த கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஆர். ஐயாத்துரை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை புலோலி உபஅலுவலக நூலகப் பொறுப்பாளர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம், கிராமசேவை அலுவலர் திரு. க. வேலாயுதபிள்ளை, பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. கே. சண்முகநாதன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(கரவெட்டி நிருபர்)

## தமிழ்மக்களை பீரங்கித் தீனியாக்கும் புதிய நடவடிக்கை!

### கம் [இடது] கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை இராணுவ முகாமைச்சுற்றிய ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயமும், பெரும் ஆயுதங்களைப் பாவிப்பதற்கான அனுமதியும் தமிழ் மக்களைப் பீரங்கித்தீனிகளாக்கும்புதிய நடவடிக்கை என்றே கொள்ள வேண்டும். அரசின் இம்முடிவை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி [இடது] வன்மையாகக் கண்டிக்கின்றது. இதை உடன் வாபஸ் பெற வேண்டும் என வற்புறுத்துகிறது.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) பொதுச் செயலாளர் திரு. கே. ஏ சுப்பிரமணியம் அரசியல் குழு சார்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்

மேலும் அவ்வறிக்கையில்; கோட்டை இராணுவ முகாமைச்சுற்றியுள்ள பகுதிகள் வடபகுதி மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளின் மையமாகும். அவை இயங்காவிடின் முழுவடபகுதியுமே ஸ்தம்பிதம் அடைந்து விடும். அதேபோல் வடபகுதில் உருவாக்கப்பட்டுள்ள ஏனைய ராணுவ முகாம்களைச் சுற்றியும் பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தப்பட்டால் தமிழ்மக்கள் இன்றைய கஷ்டம் நிறைந்த நிலையில் எவ்வாறு தமது அன்றாட அலுவல்களைச் செய்ய முடியும். எனவே தமிழ் மக்களைப் பற்றி சிறிதளவேனும் அக்கறை காட்டாத முன்பின் யோசனையற்ற அரசின் இம்முடிவுகள் உடன் வாபஸ் வாங்கப்படவேண்டும். தமிழ்மக்களை மேன்மேலும் விரக்திப்படுத்தி நசுக்கமுறபடும் செயல்களை நிறுத்த வேண்டும் என்பதை எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வற்புறுத்துகின்றது

## "ஹிட்லர் உத்தரவிலும் கொடுமையானது!"

(யாழ்ப்பாணம்]

"யாழ் நகரில் ஜனவரி 16-ம் திகதி அதிகாலை 6 மணியளவில் யாழ். கோட்டையிலிருந்து வெளிவந்த வெடிகுண்டுகள் பொது மக்கள் வாழும் குடியிருப்புகளில் வீழ்ந்து 3 பேர்களை பலி எடுத்ததுடன் மேலும் 19 பேர்களை காயப்படுத்திய பயங்கர நடவடிக்கையை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்"

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர், ஜெயவர்த்தனாவுக்கு இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் சார்பில் வடபிரதேச தொழிற்சங்கப் பிரதிநிதி ஜனாப் எம். ஏ. சி. இக்பால் அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார். அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"கோட்டையிலிருந்து எதுவித குற்றமும் இழைக்காத அப்பாவி மக்கள் மீது வெடிகுண்டுகளை வீசி கொலை செய்வது புத்ததர்ம கொள்கையா? அல்லது பயங்கரவாத நடவடிக்கையா? என்பதை அறிய விரும்புகிறோம். இவ்வாறு நீங்கள் குண்டுகளை வீசுவதன் மூலம் யாழ். நகரில் வாழும் பல இனத்தைச் சேர்ந்த மக்களைத்தான் கொல்ல முடியுமே தவிர இனப்பிரச்னையை தீர்க்க முடியாது அதை மேலும் விரிசலாக்கவே உதவும். கோட்டையிலிருந்து மக்கள் குடியிருப்புகளின் மீது வீசப்படும் குண்டு வீச்சுக்களை உடன் நிறுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம்.

"கோட்டையிலிருந்து 1000 மீற்றர் சுற்றளவு நிலம் இராணுவ பாதுகாப்பு வலயம் என்று அரசினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு மக்கள் விரோத நடவடிக்கையாகும் யாழ்ப்பாணத்தில் கோட்டையை சுற்றியுள்ள 1000 மீற்றர் நிலத்திலேயே பல்லாயிரக்கணக்கான மக்கள் நெருங்கி வாழ்கிறார்கள். அவர்களது தொழில். வர்த்தகம், பிள்ளைகளின் கல்வி மற்றும் அரசாங்க நிறுவனங்கள் வங்கிகள், மின்சார நிலையம், பஸ் நிலையம், ஆஸ்பத்திரி, காப்புறுதிக் கூட்டுத்தாபனம். நீதிமன்றம், முக்கியமான பல பாடசாலைகள், எல்லாம் 1000 மீற்றருக்குள்ளேயே உள்ளது. ஆகவே அரசு ராணுவ பாதுகாப்பு வலயமாக பிரகடனப்

(7-ம் பக்கம் பார்க்க)


## அறிவித்தல்

சென். பீற்றர்ஸ் பாலர் பாடசாலை

மாசிமாதம் 3-ந் திகதி திங்கட்கிழமை பாடசாலை ஆரம்பமாகும். வேம்படி மகளிர் கல்லூரிப் பாதையையே எமது பாலர் பாடசாலை நுழைவாசலாகவும் பயன்படுத்தவும்.

அதிபர்
மிஸ் எம். தம்பையா.
[A 114]



## ஓர் உருக்கமான வேண்டுகோள்

யாழ்ப்பாணம். இலங்கை வங்கியிலிருந்து இளைப்பாறிய வட்டுக்கோட்டை கிழக்கு திரு. மருதமுத்து மகேசனை 09-01-86 அதிகாலை 5-45 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் ஒரு மோட்டார் வாகனத்தில் கடத்திச் சென்றனர்.

இவர் இருதயநோய், வாதநோய், மூலநோயினாலும் பீடிக்கப்பட்டு இளைப்பாறி தனது இல்லத்திலே தனது கருமங்களையே பார்க்கமுடியாத தேகநிலையிலுள்ளவர். இந்த உண்மையான நிலையை உணர்ந்து கருணை கூர்ந்து மனிதாபிமானத்துடன் இவரை இவரது இல்லத்தில் எதுவித நிபந்தனையும் இன்றிக் கொண்டு வந்து விடுமாறு வேண்டுகிறோம்.

நாங்கள் எல்லோரும் இவரதுவிடுதலைக்குக்கடவுளை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், சுற்றத்தார்,
வட்டுக்கோட்டை.
சித்தங்கேணி மக்கள்.

C 295



# கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு எங்கள் முகவர் உங்களை அழைத்துச் செல்வார்.

அத்துடன்

மத்தியகிழக்கு நாடுகளில்

ஆண், பெண் இருபாலாருக்குமான

வருமானத்திற்கான ஒழுங்கு செய்து கொடுப்பதுடன்

பாஸ்போட், BOND,

சகல நாடுகளுக்குமான

விமான டிக்கட்டுகளுக்கும் துரிதகதியில்

GROUP ATLANTIC TRAVELS

(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)

163, Hospital Road, Jaffna.

(A 109)

## மணிவாக்கு

மார்க்கண்டர்க்காக மறலி பட்டபாட்டை யுன்னிப்
பார்க்கின் அன்பர்க்கென்ன பயங்காண் பராபரமே.

— தாயுமானவர்

மறலி - யமன்

# நமது நோக்கு

## அதுதானடி! அதுதானடி!

கொழுக்கட்டையை தமது நண்பர் வீட்டில் சுவைத்து விட்டுவந்த ஒருவன் தன் மனைவிக்கு அதன் உருசியை வர்ணித்தானும். துரதிர்ஷ்ட வசமாக அந்த உணவின் பெயரை மறந்து விட்டான் அதனால் எழுந்த வாக்குவாதத்தில் மனைவியைத் தாக்க நேரிட்ட போது ''வாய்க்கட்டை விழுவான் அடித்த அடி கொழுக்கட்டை போல் வீங்கிற்று'' என்முளாம்.

'அது தானடி, அது தானடி நான் சொன்ன காரியம்' என்றொரு நாடோடிக் கதை உண்டு

கச்சேரிச் சத்தியாக்கிரகம் முடிவடைந்து இன்று சுமார் 16 வருடங்கள் ஆகின்றன. உலகத்தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் முடிவடைந்தும் சுமார் 12 வருடங்கள் ஆயின.

இவ்விரு நிகழ்ச்சிகளிலும் தீவிரமாகப் பங்கு பற்றாத மக்கள் இப்பகுதியில்இருக்கவில்லை.

சத்தியாக்கிரகத்தில் எல்லா வீதிகளும் யாழ் கச்சேரிக்கே மக்களை இட்டுச்சென்றன. தமிழ் விழாவில் எல்லா வீதிகளும் யாழ். வீரசிங்க மண்டபத்தில் முடிவடைந்தன. பேதங்கள் யாவும் கடந்த நிலை அது

இவ்விரண்டிலும் இறந்தோர் காயப்பட்டோர் விடுதலை வீரர்களே! 1960ல் சத்தியாக்கிரகம்; 1974ல் உலகத்தமிழ் விழா; இடைவெளியில் ஒரு உறக்கநிலை; 1974இல் சத்தியாக்கிரகப் போராட்டம் மீண்டும் உதயமாகப் போதிய காரணம் இருந்தது.

பதினொரு தியாகிகளின் தூபிகள் இதனை இன்றும் நினைவுறுத்துகின்றன.

இவ்விரு நிகழ்ச்சிகளும்மக்களை ஒற்றுமைப்படுத்தி ஒரு பொதுமக்கள் இயக்கத்தை உருவாக்க முடியாத நிலை எங்ஙனம் எழுந்தது?

இது ஆறுதலானஆராய்ச்சிக்குரிய விடயம் அல்ல.

மகாத்மா காந்தியின் பெயரை உச்சாடனம் பண்ணிய தலைவர்கள் மக்கள் இயக்கத்தை கட்டி எழுப்பத் தவறியதால் சிறிமா அம்மையாரின் தீவிர ஆட்சி தமிழ்த்தேசியத்துக்கு ஒரு பிறேக் போட முடிந்தது. கொழுக்கட்டையை மறந்து விட்டோம்.

இன்று ஆட்சியிலிருக்கும் ஐ, தே. கட்சி அம்மையாரைப் போல ஒன்றைச் சொல்லி அதனையே செய்யும் அரசியல் தந்திரமற்ற ஆட்சி அல்ல.

அரசியல் தந்திரம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் பாசுபதாஸ்திரம்; ஆனால் விரலுக்கேற்ற வீக்கம் போல அது எதனையும் முறியடிக்குமென்று சொல்வதற்கில்லை. 1979ல் ஆரம்பமான பயங்கரவாத ஒழிப்பு 8 வருடத்தில் யாழ். கோட்டையில் மேடேறி விட்டது.

பாராளுமன்றம் சென்றவர்கள் ஏமாற்றமடைகின்றனர் என்று உணர்ந்த இளைஞர்கள் - இளங்கன்றுகள் பயமறியாத நிலையில் இந்த அரசியல் நாடகத்துக்கு முற்றுப்புள்ளிவைக்கமுனைந்தன,

இன்று அவர்களின் சாதனை வளர்ந்தோரைத் தட்டி எழுப்பியிருக்கிறது.

கோட்டையைக் காப்பாற்றுவதா? அல்லது கோட்டை விடுவதா? ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் கேட்ட கேள்வி—வாழ்க்கையில் பலர் மிக ஆபத்தான கட்டத்தில் என்றும் கேட்கும் கேள்வி.

இளைஞர்களின் போராட்டத்தை அனுதாபத்துடன் கண்காணித்து வந்த முதியோர் மீண்டும் கச்சேரி வாசலை நாடிநிற்கின்றனர்; முன்னர் கச்சேரிக்கு 'வடக்கிருத்தல்' என்றதால் அது பிசுபிசுத்துப் போய்விட்டது. இன்று செயலகத்துக்கு தெற்கிருத்தல் வெற்றியைத் தரவல்லது.

'மலையக மக்கள் தங்கள் ஒற்றுமையால் குடியுரிமையை வென்றெடுத்தனர்' என்கிறார் அமைச்சர் தொண்டமான்.

இலங்கை வாழ் தமிழ்மக்கள் 'விடுதலை' விடயத்தில் ஒற்றுமையின்மையால் எடுத்த நடவடிக்கைகள் தொடரமுடியாத நிலையில் தோல்வியடைந்தன.

இன்று இன்னொரு சகாப்தம்; இன்னொரு போராட்டம்; 'பயங்கரவாதம்' நிறைந்த போராட்டம். நெருப்புடன் விளையாடியது போதும்.

அகில உலகுமே இந்தக் கொடுமை நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கோருகிறது. அண்டை நாடாகிய இந்தியா சும்மாவிருக்கிறதா?

வருடக்கணக்கில் இளைஞர் நடத்திவரும் ஆயுதப் போராட்டம் அதன் விளைவு இந்தியாவிற்கு பழம்பாடம்.

எவ்வாறு மலையக மக்கள் பிரச்னைக்கு இந்தியா உதவியதோ அவ்வாறு 'போர் நிறுத்தம்' தொடக்கி வைத்த இந்தியா இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு நியாயமான முடிவை நிர்ப்பந்திக்கவேண்டும்.

ஆளுக அல்லது வெளியேறுக என்ற மணிவாக்கில் நம்பிக்கை கொண்ட ஜனாதிபதி ஜயவர்த்தன தமிழ்மக்கள் நூற்றுக்கு நூறு ஒற்றுமைப்பட்டிருப்பதை உணரவல்லவர்.

இந்த இக்கட்டான நிலையில் இதனைத் தீர்த்துவைக்கும் பொறுப்பு அவருடையதே! உரிமையுங்கூட.

## திருத்தம்

நேற்றைய 'ஈழநாடு' ''நமது நோக்கில்'' இரண்டாம் கலம் இரண்டாம் பந்தியில் 'லிபியா' அதிபர் கடாபி ஜனாதிபதி ஹிட்லரை ''என்றிருப்பதை ஜனாதிபதி றீகனை'' எனத்திருத்தி வாசிக்கவும்- (ஆ - ர்)

### அமரர் மார்ட்டின் லூதர்கிங்

# அமெரிக்காவில் காந்தியத்தை அறிமுகப்படுத்தியவர்!

## நேற்று அவர் நினைவுதினம்

அகிம்ஸா புருஷர் காந்தியடிகளைப் பின்பற்றி அகிம்சைப் போராட்டங்களை நடத்திய மார்ட்டின்லூதர் கிங்கை பெரும்பாலானோர் அறியார்.

அமெரிக்காவில் நீக்ரோ இன மக்கள் மிகவும் மோசமான நிலைப்பாட்டுக்கு ஆளாகியிருந்த காலம். பொது நிகழ்ச்சிகளில் அவர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை; வெள்ளையர்களுடன் சமமாக நடத்தப்படவில்லை; வேலைவாய்ப்புகள் மறுக்கப்பட்டன.

இவ்வாறான ஒருகாலகட்டத்தில் இம்மக்களின் அடிமைத்தளையை உடைத்தெறிவதற்காகப் புறப்பட்டவர்தான் இந்த மார்ட்டின்லூதர்கிங்.

அதற்காக அவர் வன்முறைகளை கையாளவில்லை. பல அமைதி ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினார். அவரது சேவைகளைப் பாராட்டி அவருக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டது.

அவர் தனது 39வது வயதில் 1968இல், ஒரு வெள்ளையனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவர் 1963ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி நடத்திய வாஷிங்டனுக்கான ஊர்வலம் மிகவும் பிரசித்திபெற்றது. இதில் சுமார் இரண்டரை லட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.

அப்போது அவர் லிங்கன் நினைவு ஸ்தூபியினடியில் இருந்து அம்மக்களுக்கு ஆற்றிய உரை அமெரிக்கா நீக்ரோ மக்களை உணர்ச்சிவசப்படுத்தியது.

'எனது கனவு ஒன்று உள்ளது' என்ற சமயவாக்கியத்துடன் தொடங்கிய அவ்வுரை இங்கு தரப்படுகிறது.

''இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியில் உங்களுடன் கலந்து கொள்வதில், உங்களுடன் பேசுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

சுமார் நூறாண்டுகளுக்கு முன் ஒரு பெரும் அமெரிக்கத் தலைவர், ஆபிரகாம்லிங்கன் அவர்கள் அமெரிக்க மக்களை அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இந்த ஒப்பந்தம், காலாகாலமாக அடிமைத்தளையில் பீடிக்கப்பட்டிருந்த 'நீக்ரோ' மக்களின் சுதந்திர வாழ்வுக்கு வழிசமைப்பதாய் அமைந்திருந்தது.

ஆயினும் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நூறாண்டுகள் கடந்தபின் இன்று அமெரிக்க நீக்ரோ மக்களின் நிலை என்ன? எமது மக்கள் இன்னும்ஒதுக்கப்படுகிறார்கள். இந்நாட்டில் வசிக்கும் ஏனைய இனமக்களனைவரும் சுகபோக வாழ்க்கையை அனுபவிக்க எமது மக்கள் இன்னும் ஏழ்மையின் கோரப்பிடியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எமது நாட்டின் சிற்பிகள் எமது அரசியல் யாப்பை எழுதும்போது, இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனும், ஆமாம் நீக்ரோ மக்களும்தான், தனது பிறப்புரிமைகளை அனுபவிக்கும் வகையிலேயே எழுதினர்.

ஆயினும் நீக்ரோ மக்களைப் பொறுத்தவரையில் அமெரிக்கா தனது அரசியல் வாக்கை மறந்து விட்டது.

அதனால் நாங்கள் இங்கு எமது சுதந்திரத்தை அடைவதற்காக, எமக்குரிய நீதியைப் பெறுவதற்காக இங்கு குழுமியிருக்கிறோம். நாங்கள் இப்புனித இடத்தில், அமெரிக்கா இன்று எதிர்நோக்கியுள்ள அபாயகரமான நிலைமையைப் பற்றி எச்சரிப்பதற்காகவும் குழுமியுள்ளோம்!

இப்போது எமதுமக்கள் தங்மைப் பீடித்துள்ள அடிமைத் தளைகளை உடைத்தெறியும் காலம் வந்துவிட்டது. எமது நாட்டை இந்த நிறப்பாகுபாட்டில் இருந்து விடுவித்து சகோதரத்துவத்தை நோக்கி நகரவைக்கவேண்டிய காலம் வந்துவிட்டது!

1963ம் ஆண்டு எமது போராட்டத்தின் இறுதி ஆண்டல்ல, ஆரம்ப ஆண்டே! எமது மக்களுக்குரிய நீதியை, சுதந்திரத்தை அமெரிக்கா வழங்கும்வரை நாம் ஓயமாட்டோம். ஓயநினைப்பது மடமைத்தனம்!

ஆனால் விடுதலைக்கு போராடும் எமது (நீக்ரோ)மக்களுக்கு ஒன்றுகூற விரும்புகிறேன்!

தமது உரிமைப் போராட்டத்தை அவர்கள் நடத்துகையில் அது ஒரு ஒழுங்குமுறையில் அமைந்ததாக இருத்தல் வேண்டும். வன்முறைகளை தவறியும்பின்பற்றக்கூடாது.எமக்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைச் சக்திகளை, எமது ஆத்ம சக்தியினாலேயே முறியடிக்க வேண்டும்.

நீக்ரோசமுதாயத்தில் இன்று பெருகிவரும் இந்த வன்முறைப்போராட்டம், எமது வெள்ளைச் சகோதரர்களை எம்மிடம் இருந்து பிரித்துவைத்து விடக்கூடாது. ஏனெனில் எமதுவெள்ளைச்சகோதரர்கள், தமது இலட்சியமும் எமது இலட்சியமும் ஒன்றுடன்ஒன்று பின்னிப்பிணைந்துள்ளதை உணர்ந்துவருகின்றனர். தமது சுதந்திரமும் எமது சுதந்திரத்துடன்தான் பூரணத்துவம் அடையும் என்பதனை அறிந்துள்ளனர், அதனால்தான், இன்று, எமது கூட்டத்துக்கு அவர்களும் பெருமளவில் வருகை தந்துள்ளனர்!

சிலர் எம்மிடம் கேட்கிறார்கள், ''எப்போது நீங்கள் திருப்தி அடைவீர்கள்'' என்று நான் கூறுகிறேன். நீக்ரோ மக்களை பொலிஸார் சித்திரவதைக்குள்ளாக்குவதை நிறுத்தும் வரை நாங்கள் திருப்தியடையமாட்டோம்! எமது மக்கள் பயணக் களைப்பினால் ஓய்வெடுப்பதற்காகக்கூட நகர விடுதிகளில் தங்குவது தடைசெய்யப்பட்டிருக்கும் நிலைமை மாறும் வரை நாம் திருப்தியடையமாட்டோம்!! எமது சிறார்களை 'வெள்ளையர்க்கு மட்டும்' என்று பலகை மாட்டி அவமானப்படுத்துவதை நிறுத்தும் வரை, மிஸிஸிப்பியில், நியூயோர்க் நகரில் வாழும் எமது சகோதரரர்கள் வாக்களிக்கும் உரிமை பெறும் வரை நாம் திருப்தியடையவே மாட்டோம்!!!

இக்கூட்டத்திற்கு சமுகமளித்திருப்பவர்களில் சிலர் இப்போது தான் சிறைகளில் இருந்து வந்திருக்கிறீர்கள் சுதந்திரத்துக்கான உங்கள் போராட்டத்தினால் பொலிஸாரின் சித்திரவதைகளை அனுபவித்து வந்திருக்கிறீர்கள் சிலர். உங்களுக்கெல்லாம் நான் கூறுகிறேன் மீண்டும் உங்கள் நகரங்களுக்கே செல்லுங்கள்; இந்த இனவெறிப் பாகுபாடு ஒழியும் வரை போராடுங்கள்: தோல்விகளையும், ஏமாற்றங்களையும் கண்டு தளர்ந்து விடாதீர்கள்

(7-ம் பக்கம் பார்க்க)

## தோள் கொடுத்து உற்சாகமூட்டவேண்டும்

# மக்கள் கருத்து

நீதிமன்றம், கல்லூரிகள், தபாலகம் முதலியவை அங்கேயே இருக்க மாநகரசபை மாத்திரம் மாற்றப்படக் காரணமென்ன? ஏனையவற்றுடன் பார்க்கையில் மாநகரசபைக் கட்டிடம் இடிந்துவிழும் நிலையிலுள்ளது. நிச்சயமாக அக் கட்டிடம் இனி மாநகரசபைக்கு உதவப்போவதில்லை. இந் நிலையில் புதிதாக அமைக்கப்படவேண்டிய கட்டிடத்தை, விஸ்தரிக்கத் தேவையான வசதியற்றதும் மக்கள் நெருங்க முடியாததுமான ஓரிடத்தில் அமைப்பது பொருத்தமானதா? அதேசமயம் வேலைசெய்யும் ஊழியர்களும் தங்கள் சேவைகளை நிறைவேற்றவரும் அப்பாவி மக்களும் எந்த நிமிடமும் தங்கள் உயிரைத் துறக்க வேண்டிய சூழ்நிலை அங்கு இருப்பதை எவரும் மறுக்க முடியுமா?

30 வருடங்களாக இந்நாட்டின் தலைமைப் பொறுப்பேற்றிருந்தவர்களே இராணுவநடவடிக்கைக்கு அஞ்சிப் பிறநாடுகளில் குடியிருக்க ஆணையாளர் மட்டும் அருகிருந்து எதிர்க்க வேண்டும் எனக் கூறுவது எவ்விதத்தில் நியாயமாகும்?

எத்தனையோ உலக நாடுகளும், பல உலக அமைப்புகளும் வேண்டிக்கொண்டும் இராணுவ விஸ்தரிப்பை நிறுத்தாத அரசு ஆணையாளர் அந்தக் கட்டிடத்தில் தொடர்ந்து இயங்குவதால் மட்டும் தங்கள் இராணுவ விஸ்தரிப்பை நிறுத்திவிடுவார்கள் என்றளவுக்கு அரசின் கண்ணியத்தில் நம்பிக்கையிருக்கிறதென்றால் அது ஆச்சரியமே! வீரசிங்கம் மண்டபம், தபாலகம் முதலியவை இயங்குகின்றனவே என்பவர்கள் சென்ற வாரம்நடந்த தாக்குதலின் பின் அங்குள்ள ஊழியர்கள் வேலை செய்ய மறுத்து வருவதைப் பத்திரிகையில் பார்த்திருப்பர். அங்குள்ள கல்லூரிகளில் மாணவர்கள் சேர விரும்பாததையும் பத்திரிகைகள் வெளிப்படுத்தியது அனைவரும் அறிந்ததே. அது மட்டுமன்றி சில காலத்தின்பின் நிலைமை சுமுகமடைய மீண்டும் கட்டிடத்தைப் புதுப்பிக்கலாமே என்றும் ஒரு கேள்வி பிறந்தது. தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் போராடும் இளைஞர்களே இப்போராட்டம் எவ்வளவு காலம் நீடிக்குமோ என்பதை அறியாதிருக்க, சில நாட்களில் சமுகநிலை வந்துவிடுமென்பது போராட்டத்தையும் தங்கள் முடிவில் அசையாத நம்பிக்கை வைத்திருக்கும் இளைஞர்களையும் புரிந்துகொள்ளாதவர்களின் வாதமாகவே இருக்கமுடியும்.

[6-ம் பக்கம்பார்க்க]

# ★ புங்குடுதீவு ஸ்ரீமுத்துமாரிஅம்பாள் ஆலய பஞ்சதள இரா


அம்பாள் அனுக்கிரகம் அனைவர்க்கும் கிட்டுவதாக

**பரீஸ் மாட்ஸ்**
155, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**உதய திலகம்ஸ்**
[மொத்த சில்லறை புடவை விற்பனை ஸ்தாபனம்]
174 (86), கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**கோல்டன் செரமிக்**
மொத்த - சில்லறை வியாபாரிகள்.
2-டி, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

இருக்கை வசதி, சுகாதாரம், பாதுகாப்புடன் கூடிய தியேட்டர் அமைப்பிலான
**"மொடேர்ன் மினி சினிமா"**
[ஸ்ரீ லங்கா அச்சக லேன்]
கே. கே. எஸ். றேட். — யாழ்ப்பாணம்.
சினிமா ரசிகர்கள் குடும்பத்துடன் பார்த்து ரசிப்பதற்கென்றே அமைக்கப்பட்டது.

**அம்பிகாபதி பன்சி றேடர்ஸ்**
9 A. நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

உங்கள் இல்லங்களுக்கு ஒளி ஏற்றத்தேவையான சகல மின்சார உபகரணங்கள், மின் குமிழ்கள் P. V, C. பைப், வயர், மெயின்சுவிச் ஆகியன தரமாகவும் நியாய விலையிலும் பெற்றுக் கொள்ள எல்லோரும் நாடுவது
**"வீற்றே ரேட்ஸ்"**
(மின்சார ஒப்பந்தகாரர்)
4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**அம்பலவாணர் அன் சன்ஸ்**
196, கே. கே. எஸ். றேட்,
யாழ்ப்பாணம்.

**அம்பிகாபதி பன்சி குட்ஸ்**
66, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

**அலங்கார் நகை மாளிகை**
அசல் 22 கரட் நகைகள்
உத்தரவாதத்துடன் பெறறுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்.
169, கஸ்தூரியார் வீதி, (வின்சர் சந்தி) யாழ்ப்பாணம்.

**இந்திரா ஜுவல்லர்ஸ்**
தங்க நகை வியாபாரம்.
185 A. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**நாதன்ஸ்**
பன்சிகுட்ஸ் பாதணிகள்
நவீன சந்தை, யாழ்ப் ாணம்.

**யஹேஷா ஸ்ரோர்ஸ்,**
310-B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


# ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வரலாறு

## திருத்தல விருத்தம்

பூவிலுயர் வளம் மருவு புங்கை நகர் மானெழுவம்
பொலிந்த செந்நெல்
கோவில் வய லெழுந்த ருளிக் குல முறையா யெமை
யாண்டு குண்டு பூத்த
காவி மலரனைய திருக்கட் கடையி னுலக மெலாங் களிக்
கக் காக்குந்
தேவி மகா மாரியிரு செம்பதும் மலர்ப் பதங்கள் சிந்தை
செய்வாம்.



**யா**ழ் குடா நாட்டின் தென் மேல் திசையில் உள்ள சப்த தீவுகளின் நடுநாயகமாக அமைந்து பல்லோராலும் சுவர்ண பூமி என அழைக்கப் படுவது புங்குடுதீவு. சைவமும், தமிழும் தழைத்தோங்கும் இத் தீவகத்தின் மத்தியில் நன்னீர்த் தடாகங்களாலும், நீர் நிலைகளாலும் நெற் கழனிகளாலும் சூழப்பட்ட "கோவில் வயல்" என்னும் திருத்தலத்தில் கோவில் கொண்டெழுந்தருளி தன்னை நாடி வரும் மெய்யடியார்களுக்கு அருள் பாலிப்பவள் அன்னை ஸ்ரீமுத்து மாரியம்பாள்.

அம்பிகையின் திருக்கோவிலின்முன் கோபுர வாயிலில் அடியார்கள் அன்பர்களின் தாராள நிதி உதவியினல் சுமார் 8 லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்ட பஞ்சதள இராச கோபுர மகா கும்பாபிஷேகம் நிகழும் குரோதன ஆண்டு தைத் திங்கள் 9 ஆம் நாள் (22- 1- 1986) புதன கிழமை அதாவது நாளைக் காலை 8. 14 மணி முதல் 8.44 வரை உள்ள கும்பலக்கின சுப முகூர்த்தத்தில் நடைபெறவுள்ள சந்தர்ப்பத்தில் அம்பாள் ஆலயத்தின் பூர்வீக வரலாற்றினை அடியார்களுக்குணர வைப்பது மிகவும் சிறப்புடைத்தது.

அம்பாள் ஆலயம் அமைந்துள்ள இப் பகுதி பெருங்காடு என அழைக்கப்படுகிறது. மக்கள் இப் பகுதியில் குடியமர்வதற்கு முன்னர் இப் பகுதியில் பெரிய காடுகள் நிறைந்திருந்தமையால் பெருங்காடு என்னும் இப்பெயர் ஏற்பட்டதாகவும் இக் காட்டில் மான்கள் மிகுதியாக வாழ்ந்ததாகவும் அதனல் இப்பகுதியை மானெழுவம் என அழைப்பதெனவும் முன்னேர்கள் கூற்றின் மூலம் அறிய முடிந்தது.

புராதன ஆலயங்களுள் அம்பாள் ஆலயமுமொன்ருகும். அந்நியர் ஆட்சியில் அவர்களால் அழிக்கப்பட்ட ஆலயங்களுள் இவ்வாலயமும் ஒன்ருகும். அதன் பின்னர் அக்கால நிலைமை காரணமாக இவ்வாலயம் சீரமைக்கப் படவில்லை. பல ஆண்டுகள் கடந்த பின்னர் இக் கிராமத்தில் வாழ்ந்த ஓர் அடியாருடைய கனவில் அம்பாள் தோன்றித் தான் கோவிலின் மேற்குப் புறத்தில் உள்ள கிணற்றுள் வீசப்பட்டிருப்பதாகக் கூறிய அற்புத நிகழ்ச்சியை இப் பகுதி வாழ் மக்களுக்கு எடுத்துக் கூறினர். ஒரு நாட் காலை அவ்வடியார் தனது உடம்பினை முட்களால் சுற்றிக் கட்டி முட்காவடி எடுத்துக் கொண்டு ஆவேச உணர்வுடன் அடியார்கள் சூழ்ந்துவர அக் கிணற்றைச் சென்றடைந்து அதனுள் இறங்கினர். அம்பாள் விக்கிரகத்தைத் தேடி தமது இரு கரங்களாலும் ஏந்தியபடி மக்களின் பக்திமய அரோகரா ஒலிஒலிக்க வெளிக் கொணர்ந்தார். மக்கள் அவரைப் பின் தொடர கிழக்கு நோக்கி நடந்து சென்று ஒரு வேப்பமர நிழலில் வைத்தார் அம் மரத்தடியில் ஓர் சிறிய கொட்டில் கட்டி அம்பாளைப் பிரதிட்டை செய்து பொங்கல் பூசைகள் செய்து வந்தனர்

பல வருடங்களின் பின்னர் 2ம் வட்டாரத்தில் வாழ்ந்த அமரர் உயர் திரு இராமநாதர் அம்பலவாணர் என்னும் பெரியாரின் உள்ளத்தில் அம்பாளுக்கோர் ஆலயம் அமைக்க வேண்டும் என்றும் எண்ணமும் உதித்தது. அப் பெரியாரின் ஏனையகிராம மக்களின் ஆதரவுடன் தமக்குரிய நெல் வயலில் ஓர்ஆலயம் அமைத்து வேப்பமரத்தடியிலிருந்து அம்பாளை புதிய ஆலயத்தில் பிரதிட்டை செய்வித்து மகா கும்பாபிஷேகம் நடாத்தினர். வயற் காணியில் கோவில் அமைத்து தமககுரிய வயற் காணிகளையும் தர்ம சாதனம் செய்துள்ளார். அன்று முதல் அம்பாள் திருத்தலத்திற்கு கோவில் வயல் என அழைக்கப்பட்டு வருகிறது. இப் பெரியார் இக்காணியுடன் மேலும் நான்கு காணிகளை அம்பாளுக்கு தர்மசாதனம் செய்துள்ளார். இவரதுசெயலை நாம் போற்றிப் பாராட்ட கடமை உடையோம். அன்று முதல் மக்கள் வெகுஅன்போடு பொங்கல் பூசைகள் செய்து வழிபாடு செய்து வந்தனர். பல்லாண்டு காலம் தர்மகர்த்தாவாக விருந்து பரிபாலனம் செய்து வந்த பெரியார் 1942ம் ஆண்டு காலமாகியதும் மீண்டும் அம்பாள் நிர்வாகத்தில் வீழ்ச்சி ஏற்படத் தொடங்கியது. இதனை உணர்ந்த காலஞ்சென்ற பெரியார் இராமநாதர் அம்பலவாணரின் புத்திரர்களாய திருவாளர்கள் பரநிருபசிங்கம், சதாசிவம். தம்பையா ஆகிய மூவரும் ஏனைய உரிமையாளர்களும் ஆலய உயர்வ கருதி பெ துமக்களிடம் ஒப்படைக்க ஏகமனதாக தீர்மானித்து தமது ... ணத்தை வெளியிட்டனர்.

சைவ ஆலயங்கள் தனி ... தர் கையிலும் தர்மகர்த் ... கள் என்ற பெயரில் மு ... ளித்துவ முகவர்களின் ... லும சிக்குண்டு சீரழிந்து ... வுறுகின்ற வேதனை தரும் ... திகள் பலவற்றை நாம் ... ணுரக் கண்டிருக்கின்றோ ...

இந்த நேரத்தில் 1... ஆண்டு இவ்வாலயம் பெ... கூட்டம் நடத்தப்பட்ட... மூலம் முற்று முழுதாக ... மக்கள் நிர்வாகமாக ... சீர்பெற்று வருகின்றது. ... கால ஆரம்ப காலத்தலை... அமரர் உயர்திரு சு. வில்... தினம் ஆசிரியர் அவர்... தெரிவு செய்யப்பட்டார். ... வாண்டிலே ய கோவில் ... மைக்கப்பட்டு 1948ஆம் ... டில் பிரதிஷ்டா மகா கு... பிஷேகம் நடைபெற்று ... யேற்று விழாவுடன் ... நாட்கள் திருவிழா நடை... லாயின. ஆடிப்பூரம், ... ணிச்சதுர்த்தி, கார்த்தி... திருவிழா, மாசிமக ஊர்வ... நவராத்திரி, திருவெம்... போன்ற விழ க்களும் ... பெறுகின்றன

**சி. மாணிக்கம்**
**(தலைவர் ஸ்ரீமுத்துமாரிஅம்பாள் ஆலயபரிபாலன சபை புங்குடுதீவு)**


கட்டிடப் பொருட்களுக்கு ★
**அம்பாள்**
**றேடிங் என்ரபிறைஸ்**
234, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23818

**பரீஸ் ரெ...**
யாழ். கிளை:
153, மின்சாரநி...
(பஸ் நிலையம் முன்...
யாழ். நகர்...

# இராசகோபுர மஹாகும்பாபிஷேகம் (22-1-1986) சிறப்பு மலர் ★

...தமது எண் ...பிட்டனர்.

...ங்கள் தனி மனி ... தர்மகர்த்தாக் ...யரில் முதலா ...ர்களின் கையி ...சீரழிந்து சிதை ...னேதரும் செய்



...ற நாம் கண் ...நக்கின்றோம்,

...த்தில் 1947ம் ...லயம் பொதுக் ...த்தப்பட்டதின் ...முழுதாக பொது ...கமாக மாறி ...கின்றது. அக் ...ாலத்தலைவராக ...ரு சு. வில்வரத் ... அவர்கள் ...ப்பட்டார். அவ் ... கோவில் புனர ... 1948ஆம் ஆண் ... மகா கும்பா ...பெற்று கொடி ...வுடன் பத்து ...ழா நடைபெற ...ப்பூரம், ஆவ ... கார்த்திகைத் ...மக ஊர்வலம், ...திருவெம்பாவை ...க்களும் . நடை

பல வருடங்களுக்கு முன்னர் நாட்டில் பெரும்நோய் ஏற்பட்டு கால் நடைகள் ஏராளமாக அழிந்தன. மக்கள் பலர் மாண்டனர். மழை இன்மையால் கொடிய வரட்சியும் பஞ்சமும் ஏற்பட்டது. இதனால் மக்கள் அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் செய்து மாசிமகத்தன்று பக்தர்கள் புடைசூழ மேளதாள வாத்தியங்களுடன் அம்பாள் ஊர்வலம் நடைபெற்றது. அன்று இரவு பெருமழை பெய்தது. நோய் நீங்கியது. மக்கள் சுபீட்சத்துடன் வாழ்ந்தனர். அக்காலம் முதல் மாசிமக ஊர்வலம் நடைபெற்றது. இந்த மாசிமகத்தை அறுதம சக்கொண்டடத்து நாடகளிலும் சண்டிகா கோபமுப் இலட்சார்ச்சனையும் பல வருடங்களாக நடைபெற்று வருகின்றது.

அமரர் வில்வரத்தினப் ஆசிரியர் மறைவுக்குப் பின்னர் ஆலய பரிபாலன சபையின் தலைமைப்பதவியை அமரர் உயர்திரு நா. சோமசுந்தரம் ஆசிரியர் அவர்கள் ஏற்று சிறப்பாக நடாத்தி வந்துள்ளார். அவரது காலத்தில் பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விடத்தில் குறிப்பாக இரண்டு விடயங்களைக் குறிப்பிடவேண்டும். சாதி, சமய வேறுபாடுகள் கடந்து சகல மக்களும் ஆலயத்தில் சென்று வழிபட வசதி செய்யப்பட்டுள்ளது.

அடுத்து உயிரினங்களைக் காணிக்கையாகப் பெறுதலை நிறுத்தி வைக்கப்பட்டது. இலங்கையின் பல பாகங்களில் உயிரினங்களை ஆலயங்களுக்கு காணிக்கையாகக் கொடுப்பதும் பலியிடுவதும் வழக்காற்றில் இருந்து வந்தது. பெருங்காடு முத்துமாரியம்மன் ஆலயத்தில் முதன் முதலாக நிறுத்திய செயல், முன்னோடியான நடவடிக்கை என பிரபல நாளேடான வீரகேசரி ஆசிரியத் தலையங்கம் தீட்டி பாராட்டியுள்ளது.

ஆலயத்தின் எதிரே நாற்புறமும் படிகளால் அமைக்கப்பட்ட திருக்குளத்தில் செந்தாமரை, வெண்டாமரை மலர்களும் நிறைந்திருக்கும் காட்சி தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.

பரிவார மூர்த்திகளாக விநாயகர், பாலசுப்பிரமணியம், வைரவர், சண்டேஸ்வரி ஆகியோருக்கு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது இவ்வாலயத்தின் நிரந்தர பூசகர்களாக புங்குடுதீவை பிறப்பிடமாகக் கொண்ட சீ. செல்லையாக் குருக்களும் அவரது சகோதரர்களும் கடமையாற்றி வருகின்றனர்.

இன்னும் பல சிறப்புக் கொண்ட அம்பிகையின் இராசகோபுர கும்பாபிஷேகத்தை அடியார்கள் வந்து தரிசித்து அம்பிகையின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அடியார்கள் வேண்டுகின்றோம்.

## புங்குடுதீவில் புராணபடனம்

தீவுத் தொகுதியின் ஒரு கூறான புங்குடுதீவில் புராணபடனம் ஒரு புனித வழிபாடாக இன்றும் போற்றப்படுகிறது. சிவபுராணங்களைப் படிப்பதும் அவற்றிற்குப்பயன் என்னும் விளக்கவுரை சொல்லுவதும் கடவுட் பணியாகவும் ஒரு கலையாகவும் நடைபெறுகின்றன. இதற்குரிய அடிப்படையை அத்திவாரத்தை— ஆணிவேரை ஆய்வு செய்தல் இந்த இடத்தில் பொருத்தமாய் இருக்கும். பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தில்சமயபாடம் என்னும் வகுப்பு உருவாக்கப்படாத காலத்தில் தமிழ் மொழிப்பயிற்சியோடு சைவ சமய நெறிமுறைகளையும் அப்போதைய தமிழாசிரியர்கள் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்தனர். நாவலரின் சைவ விஞவிடை பாலபாடம் முதலியவற்றை மனப்பாடஞ்செய்ய வற்புறுத்தினர். மனப்பாடம் செய்யாத மாணவரை தண்டித்தனர். சிவசின்னமாகிய திருநீற்றை நெற்றியில் பூசிக் கொண்டே பள்ளிக்கூடத்திற்கு வரச்சொன்னார்கள். அப்படிச் செய்யாதவர்களை நீறில்லா நெற்றி பாழ் என கண்டித்து வெளியே துரத்துவர். சில ஆசிரியர்கள் தாம் வைத்திருந்த விபூதிச்சம்புடத்திலோ, பையிலோ உள்ள விபூதியில் தொட்டு மாணவர் நெற்றியில் இட்டிருக்கிறார்கள். தமிழோடு இசைபாடல் என்பது அன்றைய ஆசிரியர்களுக்கு தேவார திருவாசகங்கள் ஆயும் சிவபுராணங்களாயுமே இருந்தன. இந்த இறுக்கமான உறைப்பான சமயப்பற்றும் பழக்கங்களுமே இப்பகுதியில் இன்று சுடர்விடும் சைவப்பிரகாசத்திற்கு அடிப்படை என்று கூறலாம். சைவபோத பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்ட இக்காலத்தில் மேற்குறித்த பாடபோதங்களின் பயன்பாட்டினை எண்ணி வணங்குதல் சாலப் பொருத்தமே.

சிவபுராணம் படித்தும் பொருள் சொல்வதற்கும் உரிய இடங்களாக குறிப்பிடப்படும் திருக்கோயில், நதிக்கரை, திருமடம், குளக்கரை, நந்தவனம், யாகசாலை முதலியவற்றுள் இங்கு திருக்கோயில்களிலேயே புராணபடனங்கள் நடைபெறுகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்பு சில வீடுகளிலும் புராண படனத்தை நடாத்தியுள்ளார்கள். புராண படனத்திற்கு வேண்டிய உபகரணங்களும் அபிடேகம் அலங்காரம் நைவேத்தியம் பூசைமுதலிய ஒழுங்குகளும் அடியார்களை குறித்தநேரத்தில் ஆலய மணி ஓசையால் அழைக்கும் வசதியும் இருந்ததினாலேயே திருக்கோவில்களில் புராணபடனங்கள் அதிகமாக நடக்கலாயின. சிவபுராணத்தைப் படிப்பதற்கும் பொருள் சொல்வதற்கு அந்தணரையும் அரசர் வணிகர் வேளாளர் என்னும் வருணத்தவர்களையும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது இவர்களில் அந்தணர் என்று அழைக்கப்பட்ட பிராமணர் திருக்கோவிலிலே சிவபுராணத்தை பீடமொன்றின்மேல் வைத்து நாள் தோறும் விதிப்படி பூசை செய்து வந்தமையால் அப்புராணத்தை கோவிலைவிட்டு வெளியே கொண்டுசெல்ல முடியாதநிலையும், புராணத்தைப் படிக்கவும் பயன்சொல்லவும் பிராமணர் பாண்டித்தியம் பெற்றிருந்தமையாலும், புராணப் படிப்பினைக் கேட்கக் கூடும் அடியார்கள் பக்தி சியத்தையோடு இருந்து கேட்பதற்கும், அவர்கள் நாள் தோறும் குறித்து தோய்த்துலர்ந்த ஆடைதரித்து சுற்றத்தார்களோடும் சிநேகிதர்களோடும் வெளிட் பட்டு வந்து சித்திரப்பாவைபோல அசைவற்று மௌனமாக இருந்து மெய்யன்போடுகேட்பதற்கும், விரதம்இருப்பவர்கள்அர்ச்சனை காணிக்கை முதலியன செய்வதற்கும் திருக்கோவிலே வசதியாக இருந்தமையால் புராணபடனங்கள் மிகுதியும் இங்கு நடைபெற்றன என்று கூறலாம்.

புராணப்படிப்பும் பயன் சொல்லலும் ஒருபக்திக்கலை நிகழ்ச்சியாகும். வழிபாட்டில் பயபக்தி போல; புராணத்தில் கலைபக்தி, கவின் கலைகள் உணர்வுகளை இன்பத்தில் தோய்த்து கருத்து வளர்ச்சிக்கு உதவுவது போன்று; பக்திக் கலை உணர்வுகளை செப்பனிட்டு குணங்களைத் திருத்தி சாத்துவிகமாக்கிப் பேரின்பவெள்ளத்துள் திளைப்பித்து மகிழ்ச்சியில் இறை இன்பத்தில் ஈடுபடுத்தி இறைவனையும் உயிரையும் உடனுச்சி அத்துவிதமாக்கக் கூடியது

புராணத்தை வாசிப்பவர் சபையில் உள்ளவர்கள் எல்லோரும் கேட்கும்படி வாசிக்க வேண்டும். வாசித்தல் என்பது இங்கே ஒரு இராகத்தில் பாடுதல் என்பதாகும். எடுத்துக் கொண்ட விடயத்தின் குண விசேடத்திற்கேற்றவாறு இராகம் இழுத்து வாசிக்கவேண்டும். எந்த இராகத்தில் எந்தச்சுதியில் வாசிக்கப்படுகின்றதோ அந்தராகத்தில் அந்தச் சுதியில் பயன் பொருள் சொல்லுவோரும் சொல்ல வேண்டும் பயன்சொல்லும் போது விரிவாகச் சொல்ல வேண்டியவற்றிற்கு விரித்தும் சுருக்கமாயும் சுவையாயும் சொல்லவேண்டிய கட்டங்களில் சுவைச்சுருக்கத்துடனும் சொல்லவேண்டும். இயல், இசை, நாடகத் தன்மைகள் புராணபடனத்தின்போது ஒரு பக்திநிலைப் பரவசத்தில்வெளிப்படுத்தலையும் காணலாம்.

கலை நிகழ்ச்சியின்போது உச்சக் கட்டங்களில் ஆரவாரித்துக்கைதட்டுதல்போல புராண படனத்தின் உச்ச நிலைகளில் ''நமப்பார்பதிபதயே', ''அரகர மகாதேவா'' கோஷம் எழுவதனையும் காணலாம். சில வேளைகளில் படிப்பவர் பயன் சொல்பவர் கேட்பவர் கண்களில் பக்தி மேலீட்டால் நீர் மாரி பொழிவதையும் காணலாம் இதுவே பக்திக்கலை புராணபடனத்தின் பயனாகும். பக்திக்கலையான புராண படன நிகழ்ச்சியில் படிப்பவர் எப்படி எத்திக்கு இருப்பது; எம்படிப் புத்தகத்தைப் பிடிப்பது எப்படிப் படிப்பது என்பதுபோல பயன் பொருள்

(7-ம் பக்கம் பார்க்க)

அம்பாளை வணங்கி
அவள் அருள் பெறுவோம்

ராணி ஜுவல்லர்ஸ்
(ஆர். ஜி. கட்டிடம்)
63, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
எப்பொழுதும் நீங்கள் விரும்பும் தங்க,வைர நகைகளை
திருப்தியுடன் பெறுவதற்கு உகந்த இடம்.

நியூ லெட்சுமி ஜுவல்லர்ஸ்
(உரிமையாளர் - என். லோகேஸ்வரன்)
190, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.

மங்களகரமான திறப்புவிழா 22 - 01 - 1986
"சோபனாஸ்"
கந்தசாமி கோவிலடி, பிரதான வீதி, புங்குடுதீவு.

மங்கள வைபவங்களை வீடியோ படமாக எடுப்பதற்கும்
கலர் போட்டோவாக எடுப்பதற்கும்
என்றும் நாடுங்கள்
"வீடியோ பன்னீர்"
பிரதான வீதி, புங்குடுதீவு 1.

நியூ லலிதா ஜுவல்லர்ஸ்
(உரிமையாளர்: அ. ந. ஆனந்தராசா)
தங்கப்பவுண் நகை வியாபாரம்
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

செல்லையா சிவபாதலிங்கம்
220 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வி. கே. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நாகதர்சினி
306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வி. ஆர். எம். அன் கோ.
39, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

...ரெக்ஸ்
...ரநிலைய வீதி,
...) முன்பாக
...நகர்.

நியூ கல்யாணி ஜுவல்லர்ஸ்
தங்க, வெள்ளி வியாபாரிகள்
(அசல் 22 கரட் தங்கநகைகள்)
87, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

## மன்ருடி நிற்கின்ரேம் தாயே உன்னே!

மண்வளமும், பொன்வளமும் ஒருங்கேபெற்று,
மக்களெலாம் ஒற்றுமையாய் வாழும் தீவில்,
பெருமக்கள், சிறுமக்கள் என்ற பேதமற்று
பெருமையுடன் வழிகாட்டும் பெருங் காடதனில்
கோவில் வயல் நாயகியாம், மாரியம்மன்
குடிகொண்டு கொலுவிருக்கும் சிறப்பு என்னே!
நாற்புறமும் வளம் கொழிக்கும் செந்நெல் வயல்கள்
மேற்புறத்தே மெய்யப்பன் ஆலயமாம்
மெய்யடியார் குறைதீர்க்க மிளிர்ந்து நின்ருள்!
உட்புறத்தே சென்றுநான் நோக்கி நின்றேன்
ஓங்காரத்தத்துவனும் ஐங்கரனுக்கு
ஒளிர்வான ஆலயமும் ஓங்கக் கண்டேன்
மயிலேறும் வடிவேலன் மறுபுறத்தே
மற்றுமொரு ஆலயத்தில் அமரக் கண்டேன்
வெள்ளொளியாய் திகழ்ந்து நிற்கும் கொடிமரமும்
மேன்மைபெற்று இருக்கக்கண்டேன்
மின்னொளியும் தண்ணொளியும் மிளிரக்கண்டேன்
மிடுக்கான தோற்றமுடன் தேரும் கண்டேன்
நன்மக்கள் எல்லோரும் நாமம் சொல்ல
நல்லதொரு ஆராய்ச்சிமணியும் கண்டேன்
காவலுக்குத் தெய்வமாய் நிற்கும் அப்பன்
கனிவாக ஒருபுறத்தே நிற்கக் கண்டேன்
தேவியர்க்கு செய்தி சொல்லும் சண்டேஸ்வரிக்கு
சிறியதொரு ஆலயமும் அமையக் கண்டேன்
ஊனமொடு வருகின்ற அடியவர்க்கு
உயிரளிக்கும் அன்னையவள் ஆறுகின்ற
மண்டபமும் வடபுறத்தே இருக்கக் கண்டேன்
இன்னபிற அழகோடு எடுப்பாய் உயர்ந்த
**புஞ்சதள கோபுரமும் திறக்கக் கண்டேன்**
பாங்கான சரித்திரங்கள் பலவும் கண்டேன்
அன்னையவள் அபிராமிப்பட்டருக்கு
அருள் சுரக்கும் காட்சியும் ஒருபுறமாம்
மன்னுமொரு மகிடாசுரனை வதைக்கின்ற
காட்சியும் மறுபுறமாம் - தென்னவனும்
எங்கள் அப்பன் சிவனுருக்கும், தேவியர்க்கும்
நடக்கின்ற திருமணத்தில் - பங்கயத்தில்
அமருகின்ற பிரமனேடு - பாற்கடலில்
பள்ளிகொள்ளும் மாலும் நின்று - தூது
பல சொல்லி நிற்கும் நார தரும், தூய
பல தேவர்களும் வாழ்த்திநிற்கும் - என்
உள்ளமதை உருக்குகின்ற காட்சிபல
உருப்பெற்று, ஒளிபெற்று இருக்கக் கண்டேன்
மன்னவளே! எங்கள் அன்னே மகாமாரியம்மா
மன்ருடி நிற்கின்ரேம் தாயே உன்னே!

புங்குடுதீவு சு. குணரத்தினம்

## திருக்குர்ஆன் பிரதிகள் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மாவட்டங்களில் உள்ள சகல மதரஸாக்களுக்காக திருக்குர் ஆன் விநியோகம் எதிர்வரும் 23ம் திகதி யாழ். மீரானியாக் கல்லூரியில் மாலே அஸர் தொழுகைக்குப்பின்பு நடைபெறவிருக்கின்றது. சகல மதரஸாக்களின் நிர்வாகிகளும் வருகைதந்து குர்ஆன் பிரதிகளேப் பெறுமாறு யாழ். மாவட்ட ஹிஜ்ராகுழு கேட்டுள்ளது.

## நடப்பு வருட நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சன சமூக நிலேயத்தில் தைப் பொங்கல் விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது இவ் விழாவின் போது சன சமூக நிலேயத்திற்கான புதிய நிர்வாகசபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். போஷகர் க. இரா ஜசுந்தரம், தலேவர் சு. சதாசிவம், உப தலேவர் சி. ஸ்ரீகுமார், இணைச்செயலாளர்கள் சீ. வீ. பரமேஸ்வரன், அ. கிருஷ்ணதாசன், பொருளாளர் சி. ஹரிமுகன், கணக்குப்பரிசோதகர் சி மன்மதராஜா வி. சிவஞானலிங்கம், த. ஜெயராஜா, ஆ. சுந்தசாமி, சு. அருளம்பலம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர் (ச).

## தோள் கொடுத்து...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாண நகருக்குள் இக் கட்டிடம் அமையாததேன்என்பதுஅடுத்தகேள்வி. இதைகேட்பவர்கள் நகர் என்பது பஸ் நிலேயத்தைச் சுற்றியுள்ள இடம் என்று நினேக்கிருர்கள் போலும். உண்மையில் யாழ். மாநகர சபைக்குட்பட்ட அனேத்துப் பிரதேசமும் யாழ்ப்பாண ரவுண் தான் என்பதை புரிந்து கொண்டால் இக்கேள்விக்கே இடமில்லே. பஸ் நிலேயத்திலிருந்து தூரம் அதிகம் என்கின்றனர் வேறு சிலர். யாழ்ப்பாணக் கச்சேரி, கல்விக் கந்தோர், பல்கலேக் கழகம் இவையெல்லாம் தூரத்திலில்லேயா? இவற்றுக்கு மக்கள் செல்லவில்லேயா? உண்மையில் யாழ், நகர வீதிகள் பெரும்பாலும் 30 வருடங்களுக்கு மேலாக விஸ்தரிக்கப்படவேயில்லே. ஆனுல்மக்கள் தொகையும், வாகனங்களின் தொகையும் முன்பிருந்ததைவிட 100 மடங்கு அதிகரித்துவிட்டன. இந்நிலேயில் யாழ்ப்பாணப் பஸ் நிலேயத்தைச் சுற்றியுள்ள முக்கிய அலுவலகங்கள் நகர்த்தப்படவேண்டியது மிக அவசியமாகிறது எனவே அவசியமும், வாய்ப்பும் இருக்கும் இச் சூழ்நிலேயில் மாநகரசபைக் கட்டிடத்தை நகர்த்துவதில் எவ்வித தவறுமிருப்பதாக எமக்குத் தெரியவில்லே,

சுதந்திரமாக ஆட்சி செய்த ஒரு தமிழ் மன்னனின் இராஜதானியில் அமையப்போகும் இம் நகராட்சி மண்டபம் இன்றைய நிலேயில் தமிழரின் பெருமையை எடுத்துக்காட்டுவது மட்டுமன்றி தமது உரிமைக்காகப் போராடும் தமிழ் மக்களே ஊக்கப்படுத்துவதாக அமையுமென்பதில் ஐயமில்லே.

அத்தோடு இன்னும் சில நூற்ருண்டுகளுக்கான தேவையை பூர்த்தி செய்யப்போவதாய் அமையப்போகும் புதுக் கட்டிடத்தை முழுமையாக அமைக்கத் தேவையான ஒரே காணி யாத [176 பரப்பு] யாழ். மாநகரசபை எல்லேக்குள்வேறு எங்கும் காணி இல்லாததும் குறிப்பிடத்தக்கது. யாழ். நகரின் மத்தியில் இக்கட்டிடம் அமையப்போகும் சிறப்பு திரு. கிருஷ்ணசாமி அவர்களால் முன்னமே சுட்டிக்காட்டப்பட்டது. இதை கட்டுவதற்கு பணம் எவ்வாறு கிடைக்கும் என்று சிலர் கேட்கலாம். அவர்களுக்கு என் பதில் இக்கட்டிடம் இன்று தொடங்கி நாளே கட்டி முடிக்கப்போவதில்லே. ஏறத்தாள 4-5 வருடங்கள் எடுக்கப் போகும் இவ்வேலேத்திட்டத்தில் பகுதி பகுதியாக இக்கட்டிடத்தை மக்களிடமிருந்தும், சபை வருமானத்திலிருந்தும் பணம் பெற்று முடித்துவிடலாம் என்பது உறுதி.

முடிவாக நூலகம், மாநகராட்சிமன்றம் முதலியவற்றை இராணுவம் செயலற்றதாக்க உடனேயே தன் திறமைமிகு தன்மையால் அவற்றை வேறிடங்களில் இயங்கச்செய்தும், அரச ஆதரவின்றி தீயணைக்கும் படையை பலஎதிர்ப்புகளுக்கு மத்தியில் தொடக்கியும் தமிழ் மக்களுக்கு தனித்து நின்று பாடுபட்டுவரும் ஆணையாளர் அவர்கள் இக்கட்டிடத்தை அமைக்கிருர் என்ருல் அதில் உடனிருந்து தோள் கொடுத்து அவரை உற்சாகமூட்டவேண்டியது தமிழ் மக்களின் கடனுகும்.

கு. ஸ்ரீஇரத்தினகுமார்,
யாழ்ப்பாணம்.


# புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய
# பஞ்சதள இராசகோபுர மஹா கும்பாபிஷேகம்

சிறப்பாக நடக்க எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

# "சுந்தர்ஸன்"

- நவீன மின்சார உபகரணங்கள்
- மகாராஜாவின் எஸ்-லோன் பைப்புகள், உபகரணங்கள்,
- மின்சார நீர் இறைக்கும் இயந்திரங்கள்
- சைக்கிள் ரயர், ரியூப்
- நவீன மின்தூங்கு விளக்குகள்
- சுவர் லாம்புகள்
- மின் அடுப்புகள்
- மின்சார விசிறிகள்

ஆகியவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
அத்துடன்!
"லிங்கா எலெக்ரிக்கல்ஸ்" ஸ்தாபனத்தாரினுல் உற்பத்தி செய்யப்படும்:-

- 4 அடி ரியூப் லாம்புகள்,
- 2 அடி ரியூப் லாம்புகள்
- வட்ட ரியூப் லாம்புகள்

ஆகியவற்றுக்கும் ஏக விநியோகஸ்தர்களாக உள்ளோம்.

# "சுந்தர்ஸன்" மத்திய சந்தை, மானிப்பாய்.

## ஹிட்லர்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தியதை உடன் வாபஸ் வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

''கோட்டையிலிருந்து பீரங்கித் தாக்குதல் செய்வதற்கு உத்தரவு வழங்கிய செயலானது 2 வது உலக மகா யுத்த காலத்தில் ஹிட்லர் யூதர்களை விசவாயு அறைகளில் பூட்டி கொலை செய்வதற்கு உத்தரவு பிறப்பித்ததிலும் பார்க்க கொடுமையானது. ஆகவே கோட்டையிலுள்ள ராணுவ முகாமை பாதுகாப்பதற்காக மக்களுக்கு இவ்வளவு துன்பங்களை விளைவிப்பதிலும் பார்க்க கோட்டையிலுள்ள ராணுவ முகாமை அகற்றுவதே சிறந்ததாகும்.''

## அமெரிக்காவில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

எனதருமை நண்பர்களே! நாங்கள் பெரும் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையிலும் நான் இனிய கனவு ஒன்று காண்கிறேன், அமெரிக்காவின் சுதந்திர புருஷர்களின் கனவுடன் ஒன்றிப் போன கனவு என்னுடையது.

எப்போதாவது ஒருநாள், அலபாமாமாநிலத்தில், மாநில முதலமைச்சரே இனப்பாகுபாட்டில் ஊறியிருக்கும் ஒரு. மாநிலத்தில், கறுப்புச் சிறுவர்களும், வெள்ளைச் சிறுவர்களும் சகோதரர்களாக, ஒருவருடனொருவர் கைகோர்த்து மகிழ்வார்கள் என கனவு காண்கின்றேன்.

எப்போதாவது ஒருநாள், மிஸிஸிப்பி மாநிலத்தில் இப்போது நிலவும் இன வெறியென்னும் பாலைவனம் சுதந்திரமும், சமத்துவமும் உள்ள சோலைவனமாக மாறும் என கனவு காண்கின்றேன்.

எப்போதாவது ஒரு நாள், எனது நான்கு பிள்ளைகளும், நிறத்தால் அன்றி நடத்தைகளாலேயே தரம் பிரிக்கப்படும் நாட்டில் வாழும் நிலை ஏற்படும் என கனவு காண்கிறேன்.

இக் கனவுகளெல்லாம் ஒரு நாள் நனவாகும் என்ற அசையாத நம்பிக்கை என்னிடம் உள்ளது.

இந்த நம்பிக்கையுடன் தான் எனது பயணத்தைத் தொடருகிறேன்.

இக் கனவு நனவாகும் நாளில் நாமனைவரும், கறுப்பர், வெள்ளையர், யூதர், கத்தோலிக்கர், இதர மக்களனைவரும் ஒன்றாக கை கோர்த்து நீக்ரோ சமயப் பாடலான,

''சுதந்திரம் சுதந்திரம்
சுதந்திரமடைந்துவிட்டோம்!''
இறைவா உனக்கு நன்றி
கூறுகிறோம்
நாமனைவரும் இப்போது
சுதந்திரமனிதர்கள்!!''

வணக்கம்

தொகுப்பு: இ- செந்தில்

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30
சத்தியராஜ்-பானுசந்தர்
சுயரூபம்

வெலிங்டன்
10-30, 2-30, 6-30
M. G. R.—லதா
நடித்த
நீதிக்கு தலைவணங்கு
[புதிய பிரதி]

லிடோ சினிமா
10-30, 2-30, 6-30
சிவகுமார்-லஷ்சுமி
ஸ்ரீபிரியா-தேங்காய்
மனோரமா
அவன்-அவள்-அது
(புதிய பிரதி கலர்)

## பிரிகேடியர்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

போது கேட்டுக்கொள்வார்கள்.

நேற்று முன்தினம் யாழ். நகரில் நடந்த பொதுமக்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றியும், இச் சந்திப்பின்போது தெரிவிக்கப்படும்.

பிரஜைகள்குழுவின் இணைப்புக் குழுவினரும் இன்று காலை வடபகுதி இணைப்பதிகாரி பிரிகேடியர் திரு. எச். எஸ். ரூபசிங்காவை சந்தித்து 1000 மீற்றர் பாதுகாப்பு வலயப் பிரகடனத்தை வாபஸ்பெறுமாறு கோருவார்கள். (க)

## தபால்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. தபால் விநியோகமும் நடக்கவில்லை.

ஊழியர்கள் அச்சத்தினால் திரும்பிச்சென்றனர்.

கடந்த வியாழக்கிழமை முதல் யாழ். தபால் கந்தோர் இயங்காதது குறிப்பிடத்தக்கது.

யாழ். வீரசிங்கம் பண்டபத்திலுள்ள அரச காரியாலயங்களும் இயங்கவில்லை.

இக்காரியாலயங்களுக்கு ஊழியர்கள் குறைவாகவே வந்திருந்தனர். பொதுமக்கள் எவரும் செல்லவில்லை.

யாழ். நகரிலுள்ள வங்கிகளும் இயங்கவில்லை. வாடிக்கையாளர்கள் திரும்பிச்சென்றனர். (க)

## புங்குடுதீவில்...

( ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்பவர் எத்திக்கு நோக்கி எப்படியிருந்து சொல்லவேண்டுமென்ற விதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. வடக்குத் திக்கும் கிழக்குத் திசையுமே ஏற்சப்பட்டுள்ளன. புராணத்திற்குப் பயன் பொருள் சொல்பவருக்கு எத்தகைய ஆற்றல்கள் இருக்கவேண்டுமோ அதுபோல படிக்க இருப்பவருக்கு புணர்ச்சிவிதி, நிறுத்தல், நீட்டல் விதிகள் தெரிந்திருக்கவேண்டும். இல்லையேல் பக்திக்கலை வெளிப்பாட்டில் தொய்வுஉண்டாகி கேட்போர் மன ஐக்கியத்தில் விரிசல் விழுந்து விடும்.

புங்குடுதீவின் புராணபடன வரலாற்றிலே பயன் பொருள் சொல்லியோராய்கீழ்க்காணும் பெரியோர்களைக் குறிப்பிடலாம் ச.விநாசித்தம்பி வைத்தியர், நா.குமரேசு வாத்தியார் தி.சதாசிவக் குருக்கள், சி அப்பாப்பிள்ளை, சி. கணபதிப்பிள்ளை வைத்தியர், சி.இ சதாசிவம்பிள்ளை ஆசிரியர், வே. கணபதிப்பிள்ளை, க. நாகமணியர், ஸ்ரீனிவாசக்குருக்கள், வித்துவான் பொன்.அ.கனகசபை வித்துவான் சி ஆறுமுகம், தி சதாசிவம், ஆசிரியர் சி.சின்னத்துரை, ஆசிரியர் க. முத்துலிங்கம், நொத்தாரிசு ம.நமசிவாயம் ஆகியோரே.

இவர்களுள் இலக்கிய நயம், இலக்கணத்தெளிவு, திருமுறை ஆட்சி சைவ சித்தாந்த நுட்பம், சொற் பொருள் நயங்கள் கலைத் தன்மை, பாணி வித்தியாசங்கள் ஆகியவற்றுள்வேறுபாடு உடையவர்கள் இருப்பினும் புராண படன பயன் பொருள் சொல்லுவதில் அனைவரும் வித்துவம் உடையவர்கள் என்பது முக்கியமானதாகும், யோகிகளுக்கு ஞானம் உபதேசிக்கும் சிவபெருமான் தெளி பளிங்கு வடிவினராய் இருந்தது போல புராண படனத்தை தொடர்ந்துபடித்தும் பயன் பொருள் சொல்லியும் கேட்டும் இருப்பவர்கள் சத்துவ குணத்தின் பளிங்கு வடிவினராய் தோற்றம் அளிப்பதைக் காணலாம். சார்ந்ததன் வண்ணமாகும் திருப் பொலிவு இவர்களில் நாளுக்கு நாள் உண்டாவதையும அவதானிக்கலாம். இத்திருக் கூட்டத்தினர் புராண படனம் முடிய வீடு திரும்பும் போது வழியில் எதிர்ப்படுபவர்கள் ஒதுங்கி நின்று வணங்கி வாழ்த்துவர்.

## பாதுகாப்பு---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

காப்பு வலயத்தை அமுல் படுத்தியுள்ளது.. 1000 மீற்றர் என்று குறிப்பிட்டுள்ள இந்த பாதுகாப்புவலயத்தால் யாழ்ப்பாணத்தில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம் மக்களின் மூலதனங்களும் அவர்களின் உயிர்களும் பாதிக்கப்படவுள்ளன. இக்கஷ்டங்கள் துயரங்கள் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் பாதுகாப்பு வலயத்தைமுற்றாக நீக்கவேண்டும். இங்கு சிறுபான்மையாக வாழும் முஸலிம் மக்களைப் பாதுகாக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இந்தப் பாதுகாப்பு வலயம் அமுலுக்கு வருவதற்கு முன்பே இங்கு வாழும் முஸ்லிம் மக்களில் இதுவரை ஏழுக்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர். எனவே யாழ்ப்பாண முஸ்லிம் மக்களின் இந்த இக்கட்டான நிலைமையை அரசாங்கம் உடன் கவனத்துக்கு எடுத்து பாதுகாப்பு வலயத்தை ரத்துச்செய்யும்படி இஸ்லாமிய இளைஞர் அமைப்பு கேட்டுக்கொள்கிறது.

## யாழ். நகர்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் நேற்றுக் காலை வெடிச்சத்தங்களைத் தொடர்ந்து பதற்றம் ஏற்பட்டது. மக்கள் சிதறி ஓடினர்கள். வாகனங்கள், பஸ்கள் வழக்கம்போல் ஆரியகுளம் சந்தியை வந்தடைந்தன

கல்லூரி மாணவர்கள் வந்த பஸ்களிலேயே திரும்பிச்சென்றனர். பஸ்நிலையம் சில மணி நேரம் வெறிச்சோடிக்காணப்பட்டது. நண்பகலுடன் வழமைக்குத் திரும்பியது.

இடிபாடுகளுடன் காணப்பட்ட யாழ். நகரமண்டபத்தைச் சிலர் படம்பிடிக்க முற்பட்டபோது கோட்டைப் பகுதியிலிருந்து வெடிச்சத்தம் கேட்டதாகவும், இதனைத் தொடர்ந்து பதற்றம் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது

நகரில் சில கல்லூரிகளில் வகுப்புகள் நேற்று நடைபெறவில்லை. (க)

## தொழில் நுட்ப கல்லூரி பரீட்சைகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கான இறுதி பரீட்சை [1984 - 1985] தொழிற் கற்கைகளிலான தேசிய தராதர பத்திரம் [கணக்கியல் சந்தைப் படுத்துதல் [நிர்வாகம்] சுருக்கெழுத்தாளர் தராதரப் பரீட்சை இம் மாதம் 27 ம் திகதி ஆரம்பமாகுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். பரீட்சை பெப்ரவரி மாதம் ஆறும் திகதி வரைக்கும் நடைபெறும் சகல மாணவர்களுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது.

## பிரஜைகள் குழு செயலாளரின் வாகனம் கடத்தல்

[யாழ்ப்பாணம்]

தையிட்டி-ஊறணி பிரஜைகள் குழுச் செயலாளர் சி. சத்தியசீலனின் மோட்டார் சைக்கிளை இனந்தெரியாத நபர்

(8-ம் பக்கம் பார்க்க)

## தவறிவிட்டது

வாமதேவன் விமலதேவன், 262, அன்புவழிபுரம், திருகோணமலை என்பவருடைய அடையாள அட்டை ஒறேஞ் நிறமுடைய பேசுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் திருப்பதி ஸ்ரோர்ஸ், மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.

[A119]

Borwn நிறமுடைய பாக் [Bag] ஒன்றுக்குள் E 107591 இலக்கமுடைய பாஸ்போர்ட்டும் விமான டிக்கட் ஒன்றும் 18-1-86இல் கொழும்பிலிருந்துவந்த யாழ்தேவி வண்டிக்குள் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் C கோபாலச்சாரி, மடத்தடி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

[C309]

## பனை அபிவிருத்திச்சபை கூறுவிலை கோரல்

பனை அபிவிருத்திச்சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்வதற்குத் தரமான பிரதேச உற்பத்திப் பொருட்களுக்கு கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை சம்பந்தமான முழுவிபரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தில் 31-01-86 திகதிக்குப் பிந்தாமல் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
பனை அபிவிருத்திச்சபை.

[A115]

## வெளிவந்து விட்டது!

''பொது அறிவும்
பொது உளச்சார்ப்பும்''

ஆசிரியர் வே. யுகபாலசிங்கம் B. A. Hons.
(உதவி விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)

விலை ரூபா 25/-

தோட்டப்பாடசாலை ஆசிரியர் பரீட்சைக்கும் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்கும் ஏற்ற வகையில் எழுதப்பட்டது.

கிடைக்குமிடங்கள்:

சாரதா புத்தகசாலை பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
துர்க்கா ஸ்ரேனேர்ஸ் பஸ் நிலையம், சுன்னாகம்.

வெளியீடு:

பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

C 306

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## கேள்வி அறிவித்தல்

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள ஆட்டிறைச்சிக்கடை, குருநகர் சந்தைக் கடை ஆகியவற்றை அவ்வட்டவணையில் குறிப்பிடப்படும் காலத்துக்கு 15-02-86-ம் திகதி முதல் குத்தகைக்குக் கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 06-02-86ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

௨. கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பிணையும், கேள்விப்படிவக்கட்டணம் ரூ. 50/- செலுத்துவதின்பேரில் 05-02-86ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிவரையும் யாழ். மாநகராட்சிமன்ற சிறும்பியடி அலுவலகத்தில் வழங்கப்படும் இணைப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். கேள்விப்படிவங்கள் யாழ். மாநகராட்சிமன்ற இந்துவிடுதி அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல்வேண்டும் அல்லது பதிவுத்தபால் மூலம் யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு 06-02-86ம் திகதி நண்பகல் 12-00 மணிக்குப்பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும்.

### அட்டவணை

| | குத்தகை விபரம் | குத்தகைக் காலம் | கேள்விப் பிணை | மாதவாடகை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைத்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | கொட்டடி சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல. 2 | $22\frac{1}{2}$ மாதம் | ரூ. 2500/- | ரூ. 75/- | ரூ. 20300/- |
| 2. | குருநகர் சந்தைக் கடை இல. 73 | 5 வருடம் | ரூ. 1500/. | ரூ. 100/- | ரூ. 17000/- |

3. இக்கேள்வி சம்பந்தமான இதர விபரங்களை யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற (சிறும்பியடி) நானுவித இறைவரிக்கிளை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சீ. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 20-01-86.

(A 116)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

"வடக்கு-கிழக்கு-மலையகம் பிரிவினை வேண்டாம்

# ஐக்கியமும் ஒன்றுபட்ட செயல்திட்டமுமே இன்று தேவை!"

## அமைச்சர் 'தொண்டா' கருத்து

[கொழும்பு]

'தமிழினத்தின் இன்றைய இருள்சூழ்ந்த காலத்தை மாற்றியமைக்க நம் ஒன்றுபட்டு, திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். வடக்கு, கிழக்கு, மலையகம் என்று நம்மை பிரித்துப் பார்க்கக்கூடாது. ஒற்றுமையும் ஒன்றுபட்ட செயற்திட்டமுமே எமக்கு இன்று அவசியமாகும்' என்று கிராமிய தொழிற்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நேற்று நடந்த ஓய்வுபெற்ற நீதியரசர் அமரர் வி. சிவசுப்பிரமணியத்தின் நினைவஞ்சலிக் கூட்டத்தில்அமைச்சர் தொண்டமான் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

'நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் இந்துசமயத்திற்கும் அரும் பணியாற்றிய அமரர் வி. சிவசுப்பிரமணியத்தின் மறைவு தமிழினத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும், அவரின் இலட்சியங்கள் நிறைவேற நாம் பாடுபடவேண்டும்.

திரு. ஏ. சி. நடராசா தலைமையில் நடைபெற்ற இந்த நினைவஞ்சலிக்கூட்டத்தில் சமசமாஜக்கட்சித் தலைவர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை, இராமகிருஷ்ண மிஷனைச்சேர்ந்த சுவாமி பிரேமானந்தா, சட்ட மாஅதிபர் திரு. சிவாபசுபதி ஆகியோரும் உரையாற்றினர்கள். (இ)

# 'ஈழவர் முன்னணி நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்களைச் சுற்றி 1000 மீற்றர் தூர பந்தோபஸ்து வலயத்தை வாபஸ் பெறுமாறு கோரியும், அப்பாவி மக்களை ஆயுதப்படையினர் கொலை செய்வதைக் கண்டித்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நேற்று உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பகுதியில் நடைபெற்றது.

'ஈழவர் முன்னணி'யால் நடத்தப்பட்ட இந்த ஊர்வலத்தில் பாடசாலை மாணவ மாணவிகள் உள்ளிட்டு பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்துகொண்டனர்.

நேற்றுக்காலை 8-30 மணிக்கு குரும்பசிட்டிச் சந்தியில் ஊர்வலம் ஆரம்பமானது.

புன்னாலைக்கட்டுவன், வசாவிளான், குரும்பசிட்டி, குப்பிளான், ஏழாலை ஆகிய பகுதிகளில் அண்மையில் ஆயுதப் படையினரின் நடவடிக்கைகளால் பலியானவர்களினதும், காயமடைந்தவர்களினதும் உறவினர்களும் சொத்துடைமைகளை இழந்தவர்களும் ஊர்வலத்தில் காணப்பட்டனர் பெண்களே அதிகமாக இருந்தனர்.

'ஈழவர் முன்னணி' என்று பொறிக்கப்பட்ட பாரிய செந்நிறக் கொடியைத் தாங்கிய வண்ணம் இருவர் முன்னே செல்ல மற்றவர்கள் சுலோக அட்டைகளைப் பிடித்துக் கொண்டு கடும்வெயிலையும் பொருட்படுத்தாது ஊர்வலத்தில் சென்று கொண்டிருந்தனர்.

குப்பிளான், ஏழாலை, மல்லாகம், கன்னுகம் பிரதான வீதிவழியாக ஊர்வலத்தினர் சென்று 12 மணிக்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தை அடைந்தனர். அலுவலகத்தில் இருந்த யாழ் மேலதிக அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோரிடம் மகஜர்களைக் கையளித்தனர்.

யாழ். அரச அதிபரூடாக பந்தோபஸ்து அமைச்சர், ஜனாதிபதி, அமைச்சர் திரு. எஸ். தொண்டமான். இலங்கையிலுள்ள தூதுவர்கள் மற்றும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி ஆகியோருக்கு இந்தமகஜரின் பிரதிகள் அனுப்பிவைக்கும்படி கையளிக்கப்பட்டன. [மா]

# திறந்த பல்கலைக் கழகம்: யாழ்நகரிலேயே பரீட்சை!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண பிரதேசத்திலுள்ள திறந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கான சகல பரீட்சைகளையும் யாழ்ப்பாணத்திலேயே நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானம் திறந்த பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தர் பேராசிரியர் தயந்த எஸ். விஜயசேகர அண்மையில், யாழ்ப்பாண பிரதேச நிலையத்தின் சிர் திருத்தத்தினை ஆராயுமுகமாக கூட்டிய கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன

''யாழ்ப்பாண பிரதேச நிலையத்தின் மாணவர்கள் உயர் மட்ட நன்மையனைப் பெறும் முகமாகவும், செய்முறை பயிற்சிகளுக்கென கொழும்பிற்குச் செல்ல வேண்டி இருப்பதை தவிர்க்கும் முகமாகவும், நிலவும் ஆய்வு கூடங்களுக்கு தளபாடங்களையும், உபகரணங்களையும் வழங்குதல்.

''யாழ்ப்பாண பிரதேச நிலையத்தில் ஒரு நூலகத்தை நிறுவுதல்.

''சகல பாட நெறிகளுக்குமென விண்ணப்ப படிவங்களை பிரதேச மட்டத்தில் வழங்கல்.

''யாழ்ப்பாண பிரதேசத்திலுள்ள மாணவர்களுக்கான சகல பரீட்சைகளையும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலேயே நடாத்தல்.

இக்கூட்டத்தில் பேராசிரியர் பதிவாளர் டீ. எஸ். விஜயசேகர, திரு. கே. சீ. எப். சில்வா, கலாநிதி. எல். எச். சுமணதாச பேராசிரியர் ஏ. துரைராஜ, கலாநிதி. கந்தையா, திரு ஏ. ரணசிங்க, திரு என். மகாதேவன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மரண அறிவித்தல்சள்

திருமதி பாக்கியம் முத்துராசா காலமாகிவிட்டார். இவர், ஏழாலை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துராசாவின் அன்பு மனைவியும், புஸ்பராஜலிங்கம், சக்திவேல், கனகலிங்கம், புவிராஜசிங்கம், சிவஞானசிங்கம் ஆகியோரின் அன்புத்தாயாரும் கமலாதேவி, சரஸ்வதி, மனோரமா ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-01 86 செவ்வாய்க்கிழமை[இன்று] பி. ப. 1-00 மணியளவில் நடைபெறும்.

[C 310]

### திருமதி வள்ளியம்மை செகராசசுப்பிரமணியம்

கரவெட்டி நவிண்டிலைச் சேர்ந்த சோதிடர் செகராச சுப்பிரமணியத்தின் மனைவியும், நெடுந்தீவு அஞ்சலதிபர் சிவப்பிரகாசம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் மகளிர்பிரிவு தலைவர் திருமதி சரோஜினிதேவி சுந்தரலிங்கம், ஜெகதாதேவி ஆகியோரின் அன்புத் தாயாருமான வள்ளியம்மை அவர்கள் 19-1-86 ஞாயிறு காலமானார். ஈமக்கிரியைகள் நவிண்டிலில் அன்று நடைபெற்றன.

[C 304]

### வல்லிபுரம் முருகேசு

நல்லூர் அரசவீதி இலக்கம்; 67, வல்லிபுரம் முருகேசு இளைப்பாறிய தலைமை ஆசிரியர் காலமானார். இவர் இரத்தினம்மாவின் அன்புக்கணவரும், டாக்டர் சுந்தரலிங்கம் [அமெரிக்கா], இராசலிங்கம், அமிர்தலிங்கம் [பொறியியலாளர், அமெரிக்கா], திருமதி பிரேமா [அமெரிக்கா], திரவியலிங்கம் [இந்தியா] ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி ஜெய்ஸ் சுந்தரலிங்கம், திருமதி சகுந்தலா அமிர்தலிங்கம். திரு. கைலாயபிள்ளை [கணக்காளர், அமெரிக்கா] ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு. வ. முத்துக்குமாரு. திரு. வ. செல்லையா [சட்டத்தரணி], காலஞ்சென்ற திருமதி லட்சுமிப்பிள்ளை ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின்ஈமக்கிரியைகள்இன்று[21-1-86] செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று செம்மணி மயானத்துக்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். [C313]

## பிரஜைகள்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 17-ம் திகதிஇரவு இடம்பெற்றுள்ளது காங்கேசன்துறை செல்லப்பிள்ளையார் கோவிலில் வழிபாடு செய்துவிட்டு தமது மோட்டார் சைக்கிளில் சம்பவ தினம் வீடுசெல்ல முற்பட்ட சி சத்தியசீலனை இடைமறித்த இனந்தெரியாத இரண்டு நபர்கள் ஒருமணித்தியாலத்தில் தருவதாகக்கூறி அவரின் மோட்டார் சைக்கிளை கொண்டு சென்றனராம் மோட்டார் சைக்கிள் நேற்று வரை திருப்பி ஒப்படைக்கப்படவில்லை என்றும், இதனை பிரஜைகள் குழுவின் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது கஷ்டங்கள்ஏற்படுவதாகவும் சி. சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

## நாளை---

விடுத்துள்ளார்.

நாளைக்காலை எட்டுமணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து வர்த்தகர்கள் சிப்பந்திகள், ஆஸ்பத்திரி வீதிவழியாக, கச்சேரிக்கு ஊர்வலமாகச்சென்று அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பார்கள் என்று அவர் தெரிவித்தார்.

யாழ். நகரைத் தவிர்ந்த மற்றும் இடங்களிலுள்ள வர்த்தகர்கள், நாளைகாலை யாழ். கச்சேரிக்கு வந்து ஒன்றுதிரண்டு ஆதரவு தருமாறும் கோரியுள்ளார். [க]

## விமானக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1981 - 84-ம் ஆண்டுகளில் இரண்டு 'இந்தியன் ஏயர் லைன்ஸ்' விமானங்களைக் கடத்திய 1 பேரில் பத்துப் பேருக்கு விசேட நீதிபதி ஒருவர் நேற்று லாகூரில் மேற்படி தண்டனைகளை விதித்தார்.

1984-ம் ஆண்டுச் சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்ட நால்வரை நீதிமன்றம் விடுதலை செய்தது. இந்தச் சம்பவத்தில் கடத்தல்காரருக்குத் தலைவராக இருந்தவருக்கும் மற்றும் இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. [க]

## பலத்த—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்து முஸ்லிம் சமூகத்தைச்சேர்ந்த சமாதான சபையினர், சகல பள்ளிவாசல் பரிபாலகர்கள் உலமாப் பெருமக்கள், மாஅத்தே இஸ்லாமிய இயக்கம், முஸ்லிம் பாதுகாப்பு அமைப்பு. இஸ்லாமிய இளைஞர் அமைப்பு, முஸ்லிம் வர்த்தகர் போக்குவரத்துச் சங்கம், முஸ்லிம் லீக் வாலிப முன்னணி, ஜும்மா மொஸ்க் முஸ்லிம் லீக், முஸ்லிம்களது அமைப்புக்கள் ஒன்றியம், மாவட்ட சபை, மாநகர சபை முன்னாள் முஸ்லிம் உறுப்பினர்கள், முஸ்லிம் சட்டத்தரணிகள், முஸ்லிம் சமாதான நீதிபதிகள், முஸ்லிம் மறுமலர்ச்சி இயக்கம் ஆகியோர் நேற்று ஒன்றுகூடி மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றினர்.

இராணுவமுகாம்களைச் சுற்றி 1000 மீற்றர் தூரத்தினை பந்தோபஸ்து வலயமாகப் பிரகடனம்செய்துள்ளது,

இவ்வலயத்துள் வாழும் தமிழ் இனத்தவர்களையும், முஸ்லிம் இனத்தவர்களையும் மிகவும் பாரதூரமாகப் பாதிகக்கூடியதாகும். குறிப்பாக முஸ்லிம்களது வியாபாரத்தளங்கள், வீடுகள் பாதிக்கப்படுவதுடன் உயிரிழப்புகள் நேருவதற்கும் இடமுண்டு என்றும் தீர்மானங்களை உள்ளடக்கிய மகஜரை ஜனாதிபதி, பந்தோபஸ்து அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், சகல முஸ்லிம் அமைச்சர்கள், பிரதிநிதிகள் ஆகியோருக்கு அனுப்பிவைப்பதென இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. (மா)

## யாழ். சட்டத்--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விபரம் வருமாறு:

''யாழ்ப்பாணத்துச் சட்டத்தரணிகள் சங்கம் தற்போது இராணுவ முகாம்களைச் சுற்றி பிரகடனப்படுத்திய ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் வாங்குமாறு ஜனாதிபதி அவர்களை கடுமையாக வற்புறுத்துகின்றது. இதனால் யாழ்ப்பாண மக்களுக்கும் தனியார் வர்த்தகஸ்தாபனங்களுக்கும், அரசாங்க, வங்கி ஊழியர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் ஆஸ்பத்திரி நோயாளர்களுக்கும், சட்டத்தரணிகளுக்கும் நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கும் கட்சிக் காரர்களுக்கும் வலயத்துக்குடியிருப்பாளர்களுக்கும் பெரும் கஷ்டமும் உயிருக்கும் உடலுக்கும் பெரும் ஆபத்தும் விளைவிக்கின்றது. இனப்பிரச்னையை ஆயுதரீதியாக தீர்ப்பதை தவிர்த்து அனைவருக்கும் நன்மை பயக்கும் வண்ணம் அரசியல் ரீதியாக தமிழ் மக்களுடைய அடிப்படை அரசியல், மொழி, பிரதேச உரிமைகளை அளித்து உடன் இறுதித்தீர்வு காணுவதும் ஜனாதிபதியின் பொறுப்பாகும் என்பதையும் யாழ்ப்பாணத்து சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்துகிறது.''

(மா-ஐ)

## தமிழ்ப்பிரதேச...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பிரகடனம் தோற்றுவித்துள்ள பேராபத்தான நிலைமையை எடுத்துக் கூறுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது இந்தக் கூட்டத்துக்கான இணைப்பு வேலையினை ஒழுங்குசெய்வதாக யாழ் அரசாங்க அதிபர் ஒத்துக்கொண்டுள்ளார். பருத்தித்துறை, வல்வெட்டித்துறை காரைநகர், பலாலி, மயிலிட்டி, நாவற்குழி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளின் பிரஜைகள் குழுக்கள் இக்கூட்டத்துக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

''புதிதாகத் தோன்றியுள்ள இந்த ஆபத்தின் தன்மையை எடுத்துக்கூறி பொது மக்கள் வாழ்க்கை எவ்வாறு பாதிக்கப்படுகின்றதென்பதை விளக்கி இப்பிரகடனத்தை வாபஸ் செய்யுமாறு பொது மக்கள் ஸ்தாபனங்களை பிரஜைகள் குழுக்கள் கேட்டுக்கொள்கிறது. அத்துடன் புதிதாகத் தோன்றியுள்ள இவ்வபாயத்தை சகல மட்டங்களிலும் எடுத்துக்கூறுவதற்கான வகையில் இப்பிரகடனத்தை எதிர்க்கும் கையெழுத்து இயக்கம் ஒன்றினையும் தொடங்குதல் அவசியம் என்று இணைப்புக்குழு கருதுகின்றது.

இப்புதிய ஆபத்தினை எடுத்துக் கூறுவதற்கென முன்வந்துள்ள நிறுவனங்களின் பணியை வரவேற்கும் அதே வேளையில் இத்தகைய பணியினைச் செய்யுமாறு மற்றைய பல நிறுவனங்களையும் அழைக்கிறது. [க]